## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا

لَا تُحَرِّمُوْا طَيِّبٰتِ مَاۤ اَحَلَّ اللّٰهُ لَكُمْ

وَلَا تَعْتَدُوْا ؕ اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْمُعْتَدِيْنَ

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ் உங்களுக்கு அனுமதித்துள்ள நல்லவற்றை ஆகாதவையாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். மேலும் (இறைவனால் ஏற்படுத்தப்பட்ட) வரம்பை மீறாதீர்கள். வரம்பு மீறுவோரை நிச்சயமாக அல்லாஹ் நேசிப்பதில்லை. (5:88)


بسم الله الرحمن الرحيم　نحمده ونصلي على رسوله الكريم　وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 6

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 38

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

15 ஸஃபர் 1443 ஹிஜ்ரி கமரி 23 தபூக் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 23 செப்டம்பர் 2021


## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**நான் உங்களுக்கு கூறுகின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேற்கொள்ளாத வழிமுறை முற்றிலும் வீணானதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றுவதை விட்டுவிட்டு ஒருவர் வாழ்நாள் முழுவதும் எவ்வளவு தான் முட்டிக் கொண்டிருந்தாலும் அவரால் எந்த நோக்கத்தையும் அடைய முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தயார் செய்ததுபோன்ற ஜமாஅத்தை தயார் செய்ய வேண்டுமென்று இந்த ஜமாஅத்தை நிலைநாட்டியதன் மூலம் அல்லாஹ் விரும்பியுள்ளான்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### اَنْعَمْتَ عَلَيْهِمْ என்ற வசனத்தின் விளக்கம்

திருக்குர்ஆனின் சில பகுதிகள் சில பகுதிகளின் தஃப்ஸீர் மற்றும் விளக்கமாகும். ஒரு விஷயம் ஓரிடத்தில் மறைவாக எடுத்துரைக்கப்படுகின்றது. மற்றொரு இடத்தில் அதே விஷயம் தெளிவாக விளக்கி கூறப்படுகின்றது. ஆக இரண்டாவது பகுதி முந்தைய பகுதியின் விளக்கமாக அமைகின்றது.

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ (1:7) என்று அல்லாஹ் இந்த இடத்தில் கூறியுள்ளான். இது மறைவான வழிமுறையாகும். ஆனால் மற்றொரிடத்தில், அருட்கொடைகளை பெற்றவர்களின் விளக்கத்தை சுயமே கூறிவிட்டான்.

### مِنَ النَّبِيّٖنَ وَ الصِّدِّيْقِيْنَ وَالشُّهَدَآءِ وَالصّٰلِحِيْنَ (4:70)

அருட்கொடைகளை பெற்றவர்கள் நான்கு வகையான மக்கள் ஆவர். நபி, சித்தீக், ஷஹீத், சாலிஹ் ஆகியோர் ஆவர். நபிமார்களிடத்தில் நான்கு வகையான பொலிவுகளும் ஒன்றுகூடி இருக்கின்றன. ஏனென்றால் அது உயர்தரமான சிறப்பாகும். அந்த சிறப்புகளை பெறுவதற்காக சரியான முயற்சிகளை செய்வது அவசியமாகும். இது ஒவ்வொரு மனிதனின் மீதும் கடமையாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது செயலால் காட்டியுள்ள வழிமுறைகளை முயற்சி செய்ய வேண்டும்.

*(தொடர்ச்சி 12 வது பக்கம்...)*

**திருக்குர்ஆனை பொருளுடன் ஓதுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். இதன் பக்கம் கவனமற்று இருப்பது மாபெரும் அழிவிற்கு காரணியாகும். முஸ்லிம்களின் உள்ளத்தில் அல்லாஹ் எந்த அளவிற்கு நேசத்தை ஏற்படுத்தியுள்ளான் என்றால் பொருள் தெரியுமோ, தெரியாதோ அவர்கள் அதனை ஓதிக் கொண்டே செல்கின்றார்கள். சிந்தித்துப் பார்த்தால் இதுவும் இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள வாக்குறுதியை உண்மைப்படுத்துகின்றது**

### اِنَّا نَحۡنُ نَزَّلۡنَا الذِّكۡرَ وَاِنَّا لَهٗ لَحٰفِظُوۡنَ

பொருள்: (குர்ஆனாகிய) இந்த அறிவுரையை நாமே இறக்கினோம். மேலும் நிச்சயமாக இதனை நாமே பாதுகாப்போம். (15:10)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஓர் ஆங்கில திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பாளர் இவ்வாறு எழுதுகின்றார்: திருக்குர்ஆனின் வாசகங்கள் எப்படிப்பட்டவை என்றால் அதனை தர்தீல் இல்லாமல் ஓதவே முடியாது. எனவே திருக்குர்ஆனின் மொழி திருக்குர்ஆனை பாதுகாப்பதற்கு இறைவன் ஏற்படுத்திய ஏற்பாடுகளில் ஒரு ஏற்பாடாகும். முதன் முதலில் அல்லாஹ் திருக்குர்ஆனை ஆரம்பம் முதல் கடைசி வரை மனனம் செய்யக்கூடிய மனிதர்களை உருவாக்கினான். இரண்டாவதாக, அதனுடைய மொழியை எவ்வளவு எளிமையாகவும், உள்ளத்தை கவரக் கூடியதாகவும் ஆக்கினான் என்றால் அதனை மனனம் செய்வது எளிதாகும். மூன்றாவதாக, அதனை ஓதுவதை தொழுகைகளில் கடமையாக்கி விட்டான். நான்காவதாக, மக்களின் உள்ளங்களில் அதனை ஓதுவதற்கான அசாதாரண அன்பை உருவாக்கி விட்டான்.

முஸ்லிம்கள் திருக்குர்ஆனை பொருள் அறியாமல் ஓதிக் கொண்டிருக்கின்றார்கள். அதன் பொருளை அறிவதற்கு முயற்சி செய்யவில்லை என்று கிறிஸ்துவ மக்கள் எப்போதும் ஆட்சேபனை செய்கின்றார்கள். ஆனால் சீர்தூக்கிப் பார்த்தால் இதுவும் இந்த வசனத்தில் இடம் பெற்றுள்ள வாக்குறுதியை உண்மைப்படுத்துகின்றது. முஸ்லிம்களின் உள்ளத்தில் அல்லாஹ் எந்த அளவிற்கு நேசத்தை

*(தொடர்ச்சி 12 வது பக்கம்...)*

## நபிமொழி

### தர்மம் செய்வது ஒவ்வொரு முஸ்லிமிற்கும் அவசியமாகும்

1445: ஹஸ்ரத் அபூமூஸா அஷ்அரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: தர்மம் செய்வது ஒவ்வொரு முஸ்லிமிற்கும் அவசியமாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களே! (தர்மம் செய்வதற்கான) ஆற்றல் இல்லாத நபர் (என்ன செய்வார்)? என மக்கள் கேட்டனர். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், தமது கைகளால் உழைக்கட்டும். (ஏதேனும் கைத்தொழில் செய்து) தாமும் அதன் மூலம் பலனடைந்து, தர்மமும் செய்யட்டும் என்று கூறினார்கள். அதுவும் முடியவில்லையாயின் (என்ன செய்வது)? எனக் கேட்டதற்கு, தேவையுடையவருக்கும், துயருற்றவர்களுக்கும் உதவ வேண்டும் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். அதுவும் இயலவில்லையாயின் (என்ன செய்வது)? என்று கேட்டதும் நற்காரியத்தைச் செய்து தீமையிலிருந்து தம்மைத் தடுத்துக் கொள்ள வேண்டும். இதுவே அவர் செய்யும் தர்மமாகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.(புகாரி தொகுதி 3 கிதாபுஸ் ஸகாத் – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*குத்பா பேருரை 20 ஆகஸ்ட் 2021 (முழுவதுமாக)*

*ஹுஸூர் அவர்களுடன் கானா செயற்குழுவின் காணொலி சந்திப்பு – (Virtual Meeting)*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**அமீருல் மூமினீன் அவர்களே! தாங்கள் தங்களின் கருத்தின்படியே அமல் செய்யுங்கள். நாங்கள் உங்களுடன் இருக்கின்றோம். தாங்கள் எங்களுக்கு கட்டளையிடுங்கள். நாங்கள் உங்களுக்கு கட்டுப்படுவோம். எங்களை அழையுங்கள். நாங்கள் குரலுக்கு செவிமடுத்தவாறு லெப்பைக் என்று கூறுவோம். எங்களை அனுப்புங்கள். நாங்கள் புறப்பட்டுச் சென்று விடுவோம். தாங்கள் எங்களை உங்களுடன் அழைத்துச் செல்ல விரும்பினால் நாங்கள் உங்களுடன் இருப்போம்**

**நிஹாவந்த் போர் வெற்றியானது தனது விளைவின் அடிப்படையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இந்த வெற்றியை முஸ்லிம்கள் ஃபத்ஹுல் ஃபுதூஹ் என்ற பெயரால் நினைவு கூறத் தொடங்கினர்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 20 ஆகஸ்ட் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஸஹூர்** மாதம் **20 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ -

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ - اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ -

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ - صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தைப் பற்றிய நற்குறிப்பு நடைபெற்று வருகின்றது. அன்னாரின் காலத்தில் நடைபெற்ற பல்வேறு போர்களைக் குறித்து எடுத்துரைக்கப்பட்டு வந்தது. அவற்றுள் ஒரு போரின் பெயர் ஜுன்தயி சாபூர் போர் ஆகும். ஹஸ்ரத் அபூஸப்ரா பின் ருஹ்ம் ஸாஸானி நகரங்களை வெற்றி கொண்டதற்கு பிறகு அன்னார் படையுடன் முன்னேறிச் சென்றார்கள். மேலும் ஜுன்தயி சாபூர் என்ற இடத்தில் முகாமிட்டார்கள். ஜுன்தயி சாபூர் என்பது ஹூரிஸ்தானிலுள்ள ஒரு நகரமாக இருந்தது. எவ்வாறிருப்பினும் இந்த எதிரிகளுடன் காலையிலும் மாலையிலும் போர் நடந்து வந்தது. ஆனால் இவர்கள் தமது இடத்தில் நிலைகொண்டிருந்தனர். எந்த அளவுக்கென்றால் முஸ்லிம்கள் புறமிருந்து ஒருவர் அடைக்கலத்திற்கான திட்டத்தை முன் வைத்து விட்டார். எதிரி ஃபஸீல் என்ற இடத்தில் இருந்தான். சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் வெளியே வந்து தாக்குதல் நடத்தி வந்தான். எனவே ஒரு சாதாரண முஸ்லிம் இந்த திட்டத்தை முன் வைத்தபோது அவர்கள் உடனடியாக ஃபஸீல் நகரத்து கதவுகளை திறந்து விட்டனர். விலங்குகள் வெளியேறின. கடை வீதிகள் திறந்தன. மக்கள் இங்கும் அங்கும் தென்படத் தொடங்கினர். உங்களுக்கு என்னவாகி விட்டது? என்று அவர்களிடம் முஸ்லிம்கள் கேட்டனர். நீங்கள் தான் எங்களுக்கு அடைக்கலம் வழங்கியுள்ளீர்களே! நாங்கள் அதை ஏற்றுக் கொண்டு விட்டோம். நாங்கள் ஜஸ்யா வரி செலுத்துவோம். நீங்கள் எங்களுக்கு பாதுகாப்பு அளிப்பீர்கள் என்று அவர்கள் கூறினர். நாங்கள் அவ்வாறு செய்யவில்லையே? என்று முஸ்லிம்கள் கூறினர். அதற்கு நாங்கள் பொய் கூறவில்லை என்று அவர்கள் கூறினர். பின்னர் முஸ்லிம்கள் தங்களுக்குள் ஒருவர் மற்றொருவரிடம் இது குறித்து வினவினர். அப்போது முக்னஃப் என்ற பெயர் கொண்ட ஓர் அடிமை இதை செய்தார் என்று தெரிய வந்தது.

இது குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கேட்கப்பட்டபோது, அல்லாஹ் நன்றியுணர்விற்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கியுள்ளான். நீங்கள் செய்த உடன்படிக்கையை முழுமை செய்யாதவரை நன்றியுடையவராக ஆக முடியாது. ஓர் அடிமை அதை (உடன்படிக்கை) செய்திருந்தாலும் நீங்கள் அதனை முழுமை செய்யுங்கள். நீங்கள் சந்தேகத்தில் இருக்கும் வரை அவர்களுக்கு காலக்கெடு வழங்குங்கள். மேலும் அவர்களுடன் நன்றியுணர்வுடன் நடந்து கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். எனவே முஸ்லிம்கள் உடன்படிக்கையை ஆமோதித்தனர். மேலும் திரும்பி வந்து விட்டார்கள்.

(ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 425 – 2007 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது & ஸய்யிதுனா உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 689 – பாகிஸ்தானிலுள்ள அல்ஃபுர்கான் கான் கட் அச்சகத்தில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 198)

ஹூரிஸ்தான் வெற்றிகளின் நிறைவாக இந்த போர் அமைந்திருந்தது.

(செய்யது மீர் மஹ்மூது அஹ்மது சாஹிப் நாஸிர் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஅஹ்தே ஹஸ்ரத் உமர் (ரலி) பக்கம் 135)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களும் இந்த சம்பவத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஓர் அபிஸீனிய அடிமை இன்ன இன்ன சலுகைகள் உங்களுக்கு வழங்கப்படும் என்று ஒரு சமுதாயத்துடன் உடன்படிக்கை செய்து கொண்டார். இஸ்லாமிய படை சென்றபோது எங்களிடம் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது என்று அந்த சமுதாயம் கூறியது. படையின் உயர் அதிகாரி அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள தயங்கியபோது விஷயம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கொண்டு செல்லப்பட்டது. ஓர் அடிமையின் விஷயமாகவே இருந்தாலும் ஒரு முஸ்லிமின் கூற்று பொய்யாகி விடக் கூடாது.

(பஃஸ் ஸரூரி உமூர், அன்வாருல் உலூம் தொகுதி 12 பக்கம் 405)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் படைகளால் எதிரி சூழப்பட்டான். இனி நமக்கு இரட்சிப்பு இல்லை என்பதை அவன் புரிந்து கொண்டான்.

ஏற்கனவே கூறப்பட்ட சம்பவத்தின் இது விளக்கமாகும். அன்னார் தனது சொற்களில் எடுத்துரைத்துள்ளார்கள்.

இஸ்லாமிய படையின் தளபதி அழுத்தத்துடன் நமது கோட்டையை வெற்றி கொண்டு வருகிறார். அவர் வெற்றி பெற்று விட்டால் பின்னர் தோல்வியுற்ற படையுடன் எவ்வாறு நடந்து கொள்ளப்படுமோ அதுபோன்றே நம்முடன் நடந்து கொள்ளப்படும். ஒவ்வொரு முஸ்லிமும் வெற்றி கொள்வதற்கும், சமாதானம் செய்வதற்குமுள்ள விஷயத்தை புரிந்திருந்தார். வெற்றி கொள்ளப்பட்டிருந்தால் பொதுவான இஸ்லாமிய சட்டம் அமல்படுத்தப்படும். சமாதான உடன்படிக்கையாக இருந்தால் அந்த மக்கள் (எதிர்தரப்பு) நிபந்தனைகளை வகுத்துக் கொள்வர் அல்லது எவ்வளவு கூடுதலான உரிமைகளை பெற முடியுமோ பெற்றுக் கொள்வர். எனவே மென்மையான நிபந்தனைகளில் சமாதானம் ஏற்படுகின்ற வழியை மேற்கொள்ள வேண்டும் என்று அவர்கள் சிந்தித்தனர். ஆக ஒரு நாள் ஓர் அபிஸீனிய முஸ்லிம் தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தார். அவரிடம் சென்று அந்த மக்கள், என்ன ஆகிவிட்டது சகோதரரே! சமாதானம் ஆகிவிட்டால் அது போரை விட சிறந்ததா? இல்லையா? என்று கேட்டனர். அதற்கு அவர், ஆம்! என்று கூறினார். அந்த அபிஸீனிய நபர் கல்வியறிவு பெறாதவராக இருந்தார். அப்படியென்றால் நாங்கள் எங்களது நாட்டில் சுதந்திரமாக இருப்போம். எங்களை எதுவும் கூறக்கூடாது. எங்களது செல்வம் எங்களிடம் இருக்கும். உங்களது செல்வம் உங்களிடம் இருக்கும் என்ற நிபந்தனையின் கீழ் ஏன் சமாதானம் செய்து கொள்ளக்கூடாது? என்று அவர்கள் கேட்டனர். அதற்கு அந்த நபர், இது முற்றிலும் சரியாகும் என்று கூறினார். அவர்கள் கோட்டையின் கதவுகளை திறந்து விட்டனர். தற்போது இஸ்லாமிய படை உள்ளே வந்தது. அப்போது உங்களுடன் உடன்படிக்கை செய்யப்பட்டு விட்டதே என்று எதிரி கூறினான். ஒப்பந்தம் எங்கே உள்ளது? என்றும், எந்த அதிகாரி செய்தார் என்றும் முஸ்லிம்கள் கேட்டனர். அதற்கு அவர்கள் எங்களுக்கு தெரியாது. உங்களது அதிகாரி யார்? யார் உங்களது அதிகாரி இல்லை என்பது எங்களுக்கு என்ன தெரியும்? ஒரு நபர் இங்கே தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தார். அவரிடம் நாங்கள் இதை பேசினோம். அவர் இதை எங்களிடம் கூறியுள்ளார் என்று கூறினர்.

பாருங்கள்! அவர் ஓர் அடிமை ஆவார் என்று முஸ்லிம்கள் கூறினர். அவரிடம் என்ன நடந்தது? என்று கேளுங்கள் என்று அவர்கள் கூறினர். அந்த அபிஸீனிய அடிமையிடம் கேட்கப்பட்டபோது, ஆம்! நான் அவ்வாறு பேசினேன் என்று கூறினார். அப்போது அவர் ஓர் அடிமை ஆவார். அவருக்கு முடிவெடுப்பதற்கு யார் அதிகாரம் கொடுத்தார்? என்று முஸ்லிம்கள் கூறினர். அதற்கு எதிரிகள் அவர் உங்களது அதிகாரியா? இல்லையா? என்பது எங்களுக்கு என்ன தெரியும்? நாங்கள் அந்நிய மக்கள் ஆவோம். அவர் தான் உங்களது தளபதி என்று நாங்கள் கருதினோம்.

அவர்கள் புத்திசாலித்தனமாக செயல்பட்டனர்.

என்னால் இதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆயினும் நான் இந்த சம்பவத்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எழுதுகின்றேன் என்று அந்த அதிகாரி கூறினார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இந்த கடிதம் கிடைத்ததும் எதிர்காலத்தில் படைத்தளபதியை தவிர்த்து வேறு எவரும் உடன்படிக்கை செய்ய முடியாது என்று அறிவிக்கும்படி கூறினார்கள். ஆயினும் ஒரு முஸ்லிம் வாக்கு கொடுத்து விட்டார். எனவே என்னால் அதனை பொய்ப்படுத்த முடியாது என்று கூறினார்கள். தற்போது அந்த அபிஸீனிய அடிமை செய்து கொண்ட உடன்படிக்கையை உங்களுக்கு ஒப்புக் கொள்ள நேரிடும். ஆயினும் எதிர்வரும் நாட்களில் படைத் தளபதியை தவிர்த்து வேறு எவரும் எந்த சமுதாயத்துடனும் ஒப்பந்தம் செய்ய முடியாது என்று அறிவித்து விடுங்கள் என்று கூறினார்கள்.

(ஸேரே ரூஹானீ (7) அன்வாருல் உலூம் தொகுதி 24 பக்கம் 293, 294)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஈரானை வெற்றி கொண்டார்கள். அதற்கு என்ன காரணங்கள் இருந்தன. ஏன் அன்னார் நிர்பந்தத்திற்கு ஆளானார்கள். இது குறித்து இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஈராக் மற்றும் அஹ்வாஸ் போர்களுடன் இந்த இரத்தம் சிந்தும் போர் முடிவுக்கு வந்து விட்டால் அது சிறந்ததாக இருக்கும் என்பது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உள்ளத்து ஆசையாக இருந்தது. போர் புரிவதால் எந்த நன்மையும் இல்லை. எதிரி தாக்குதல் நடத்தி வருகின்றான். எதிரியை ஒரு முறை அழித்து விட்டோம். அவர்களின் வலிமையை தடுத்து விட்டோம். இனி இங்கேயே இது முடிந்து விட வேண்டும் என்று அன்னார் விரும்பினார்கள். அன்னார் (ரலி) அவர்கள் மீண்டும் மீண்டும் இந்த ஆசையை வெளிப்படுத்திய வண்ணம் இருந்தார்கள். நமக்கும் ஈரானியர்களுக்கும் மத்தியில் அவர்கள் நம் பக்கம் வராமல் இருக்கும் வகையிலும் நாம் அவர்களின் பக்கம் செல்லாமல் இருக்கும் வகையிலும் ஏதாவது தடுப்பு உருவாகி விட வேண்டுமே என்ற ஆசையை அன்னார் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வந்தார்கள்.

ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டில் மஹாஸ் போரிலிருந்து முஸ்லிம்களின் படைகளின் தலைவர்களைக் கொண்ட ஒரு குழு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடத்தில் வந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளில் ஏன் மீண்டும் மீண்டும் உடன்படிக்கை முறிக்கப்பட்டு கிளர்ச்சி ஏற்படுகின்றது? என்ற கேள்வியை முன் வைத்தார்கள். முஸ்லிம்கள் வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளில் குடிமக்களுக்கு துன்பம் தரக்கூடியவர்களாக இருப்பார்களோ? அதனால்தான் உடன்படிக்கை மீறப்படுகின்றதோ என்ற ஐயத்தை வெளிப்படுத்தினார்கள். குழு அந்த விஷயத்தை மறுத்தது. இல்லை. நிச்சயம் இவ்வாறல்ல என்று அவர்கள் கூறினர். எங்களுடைய அறிவில் முஸ்லிம்கள் முழுமையான நன்றியுணர்வுடனும், அழகிய ஏற்பாட்டுடனும் பணி செய்கின்றனர். அவ்வாறென்றால் இந்த சீர்கேட்டிற்கு என்ன காரணம்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். குழுவின் ஏனைய உறுப்பினர்களால் திருப்தியளிக்கும் பதிலை வழங்க முடியவில்லை. ஆனால் அஹ்னஃப் பின் கைஸ் அவர்கள் கூறினார்கள்: அமீருல் மூமினீன் அவர்களே! நான் உங்களுக்கு அசல் நிலவரத்தை தெரிவிக்கின்றேன். விஷயம் என்னவென்றால், நீங்கள் எங்களுக்கு கூடுதல் இராணுவ நடவடிக்கைக்கு தடை விதித்துள்ளீர்கள். மேற்கொண்டு போரிட வேண்டாம் என்றும், இதுவரை வெற்றி கொண்ட பகுதியில் தங்கியிருக்கும்படியும் எங்களுக்கு வழிகாட்டியுள்ளீர்கள். ஆனால் ஈரானிய அரசனும் உயிருடன் இருக்கின்றான். அவன் இருக்கும் வரை ஈரானியர்கள் நம்முடன் போரை தொடர்ந்து கொண்டிருப்பர். ஒரு நாட்டில் இரண்டு அரசாங்கங்கள் இருப்பது ஒருபோதும் சாத்தியமல்ல. எந்நிலையிலும் ஒன்று மற்றொன்றை வெளியேற்றியே தீரும். ஒன்று ஈரானியர்கள் இருப்பார்கள். அல்லது நாம் இருப்போம் என்று அன்னார் கூறினார். மேலும் நாம் எந்தவொரு பகுதியையும் சுயமே கைப்பற்றவில்லை. மாறாக, எதிரியின் தாக்குதல்களின் காரணமாக வெற்றி கொண்டுள்ளோம். நாம் ஒருபோதும் சுயமே போர் செய்யவில்லை என்பதை தாங்களும் அறிவீர்கள். தங்களது வழிகாட்டலும் இதுவே ஆகும் என்று அவர் கூறினார். எதிரி தாக்குதல் தொடுத்து வந்தபோது நிர்பந்தத்திற்குள்ளாகி போர் செய்ய நேரிட்டது. பின்னர் அந்த பகுதிகளும் வெற்றி கொள்ளப்பட்டன.

எவ்வாறிருப்பினும் இதிலிருந்து முஸ்லிம்களுக்கும் இந்த விஷயம் வெளிப்பட்டு விடும். அதேபோன்று காரணமின்றி போரை ஆகுமானதாக கருதுகின்ற நபர்களுக்கும் இந்த விஷயம் தெளிவாகி விடும். அதே நேரம் இஸ்லாத்தின் மீது ஆட்சேபனை செய்யக்கூடிய நபர்களுக்கும் இதில் பதில் வந்துவிட்டது. முஸ்லிம்கள் ஒருபோதும் இடங்களை கைப்பற்றுவதற்காகவும், நாடுகளை வெற்றி கொள்வதற்காகவும் போர்களை செய்திருக்கவில்லை. அவர்கள் மீது தாக்குதல் நடந்தபோது அமைதியை நிலைநாட்டுவதற்காக போர் புரிந்து வந்தனர். பின்னர் வெற்றிகளும் கிடைத்து வந்தன. எவ்வாறிருப்பினும் இந்த படைகள் ஈரானிய அரசன் புறமிருந்து வருகின்றன. கூடுதல் இராணுவ நடவடிக்கை எடுப்பதற்கும், அரசனை பாரசீகத்திலிருந்து வெளியேற்றுவதற்கும் தாங்கள் எங்களுக்கு அனுமதி வழங்காதவரை அவர்களின் இந்த நடைமுறை தொடர்ந்து கொண்டே இருக்கும் என்றும் அவர் கூறினார். இந்த நிலையில் பாரசீகர்களின் மீண்டும் வெற்றி பெறும் நம்பிக்கை முடிந்து விட்டது.

(செய்யது மீர் மஹ்மூது அஹ்மது சாஹிப் நாஸிர் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஅஹ்தே ஹஸ்ரத் உமர் (ரலி) பக்கம் 136–138 & தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 502, 503 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

உண்மையும் இதுவாக இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த கருத்தை சரியானதாக ஒப்புக் கொண்டு இனி ஈரானில் கூடுதல் இராணுவ நடவடிக்கை எடுப்பது தவிர்க்க முடியாததாகும் என்பதை புரிந்து கொண்டார்கள். நிர்பந்தம் உள்ளது. இதைத் தவிர்த்து அமைதி நிலைபெற முடியாது. முஸ்லிம்களின் இரத்தம் சிந்தப்பட்டுக் கொண்டிருக்கும். போர்கள் நடந்து கொண்டே இருக்கும் என்பதை புரிந்து கொண்டார்கள். ஆனால் இதற்கான செயல் ரீதியிலான முடிவை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஒன்றரை, இரண்டு வருடங்களுக்குப் பிறகு ஹிஜ்ரி 21 ஆம் ஆண்டு நிஹாவந்த் போருக்குப் பிறகே எடுத்தார்கள். அப்போது ஈரானியர்கள் மிகவும் வலிமையுடன் முஸ்லிம்களை எதிர்கொள்ள புறப்பட்டார்கள். மேலும் நிஹாவந்த் என்ற இடத்தில் ஒரு கடுமையான போர் ஏற்பட்டது.

(செய்யது மீர் மஹ்மூது அஹ்மது சாஹிப் நாஸிர் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஅஹ்தே ஹஸ்ரத் உமர் (ரலி) பக்கம் 138, 139)

நிஹாவந்த் போரை ஃபத்ஹுல் ஃபுதூஹ் என்றும் கூறுவார்கள். ஈரான் மற்றும் ஈராக்கில் முஸ்லிம்களின் போர் திட்டங்களில் மூன்று போர்களுக்கு முடிவை தீர்மானிக்கின்ற போர்கள் என்ற அந்தஸ்து உள்ளது. அதாவது காதிஸிய்யா போர், ஜலூலா போர் மற்றும் நிஹாவந்த் போர் ஆகியவை ஆகும். நிஹாவந்த் போர் வெற்றியானது தனது விளைவின் அடிப்படையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இந்த வெற்றியை முஸ்லிம்கள் ஃபத்ஹுல் ஃபுதூஹ் என்ற பெயரால் நினைவு கூறத் தொடங்கினர். அதாவது அனைத்து வெற்றிகளையும் விட சிறந்த வெற்றி என்பது பொருளாகும்.

நிஹாவந்த் போர் முதல் இரண்டு கடுமையான தோல்விக்குப் பிறகு ஈரானியர்கள் புறமிருந்து செய்யப்பட்ட தாக்குதலின் கடைசி முயற்சியாக இருந்தது. இந்தப் போர்களின் விவரம் இவ்வாறாகும்: ஈரானிய அரசனான யஸவ் ஜஸவ் அப்போது மரவ் என்ற இடத்தில் தங்கியிருந்தான். அல்லது பராவீத் அபூஹனீஃபா தேவ்ரி என்ற இடத்தில் தங்கியிருந்தான். மிக சுறுசுறுப்புடன் முஸ்லிம்களை எதிர்கொள்வதற்கு படைகளை ஒன்றுதிரட்ட துவங்கியிருந்தான். மேலும் தமது கடிதங்களால் ஹராஸானிலிருந்து சிந்த் வரை நாட்டில் ஒரு இயக்கத்தை உருவாக்கினான். எல்லா புறமிருந்தும் படை ஒன்றுதிரண்டு நிஹாவந்த் என்ற இடத்தில் ஒன்றுகூடத் தொடங்கியது.

(ஃபத்ஹுல் பல்தான் பக்கம் 184 – 2000 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 521 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்வால் பத்திரிகை, வாகிஆ நிஹாவந்த் பக்கம் 192 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில்

அச்சிடப்பட்டது & செய்யது மீர் மஹ்மூது அஹ்மது சாஹிப் நாஸிர் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஅஹ்தே ஹஸ்ரத் உமர் (ரலி) பக்கம் 139)

நிஹாவந்த் ஈரானின் ஒரு நகராகும். அது கிர்மான்ஷாஹ் என்ற பகுதிக்கு கிழக்கில் அமைந்துள்ளது. மேலும் ஹம்தான் என்ற மாநிலத்தின் தலைநகரமான ஹம்தானிலிருந்து சுமார் 70 கி.மீ தொலைவில் தெற்கில் அமைந்துள்ளது.

(ஃபதூஹாத்தே இஸ்லாமிய்யா தொகுதி 2 பக்கம் 118 – ஹிஜ்ரி 1428 ஆம் ஆண்டு தாருல் இஸ்லாமில் அச்சிடப்பட்டது)

நிஹாவந்த் முற்றிலும் மலைகளுக்கு மத்தியில் அமைந்திருந்த ஒரு நகரமாக இருந்தது.

(ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 426 – 2007 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் இந்தப் படையின் வருகையைப் பற்றிய தகவலை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 522 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

சில நாட்களுக்குப் பிறகு ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சுயமே அந்த பொறுப்பிலிருந்து நீக்கி விட்டார்கள். ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களுக்கு மதீனா செல்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் இந்த வாய்மொழித் தகவல்களை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு முன்னால் வைத்து விட்டார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 523 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களை பணி நீக்கம் செய்து விட்டு இந்த முக்கியத்துவம் வாய்ந்த பதவி கிலாஃபத் அவையின் சார்பாக ஹஸ்ரத் அம்மார் பின் யாஸிர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஹஸ்ரம் அம்மார் (ரலி) அவர்கள் ஈரானிய போர் நடவடிக்கை தொடர்பான தகவல்களை அன்னார் மதீனாவிற்கு அனுப்பி வைத்து வந்தார்கள்.

(ஃபத்ஹுல் பல்தான் பக்கம் 170 – 2000 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்வால் பத்திரிகை, வாகிஆ நிஹாவந்த் பக்கம் 192 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 140 – 2007 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மஜ்லிஸே முஷாவரத் கூட்டத்தை கூட்டினார்கள். மேடையின் மீது ஏறி நின்று ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அரபு சமுதாயமே! அல்லாஹ் இஸ்லாத்தின் மூலமாக உங்களுக்கு உதவி செய்தான். பிரிவினைக்குப் பிறகு உங்களை ஒன்றுகூட்டினான். பசி, பட்டினிக்குப் பிறகு உங்களுக்கு செழிப்பை வழங்கினான். எந்த மைதானத்தில் எல்லாம் எதிரிகளை உங்களுக்கு எதிர்கொள்ள நேரிட்டதோ அதில் அவன் உங்களுக்கு வெற்றியை வழங்கினான். நீங்கள் ஒருபோதும் சோர்வடையவும் இல்லை. தோற்கவும் இல்லை. தற்போது ஷய்த்தான் சிறிது படையை ஒன்றுகூட்டியுள்ளான். இறைவனின் ஒளியை அணைப்பதற்காக ஒன்றுகூட்டியுள்ளான். இது அம்மார் பின் யாஸிர் (ரலி) அவர்களின் கடிதமாகும். கவ்மிஸ், தபரிஸ்தான், தும்பாவந்த், ஜுர்ஜான், அஸ்ஃபஹான், கும், ஹம்தான், மாஹைன், மாஸப்ஸான் ஆகிய நாட்டின் குடிமக்கள் தமது அரசருக்கு கீழ் ஒன்றுகூடியுள்ளனர். கூஃபாவிலும், பஸ்ராவிலுமுள்ள உங்களது சகோதரர்களுக்கெதிராக புறப்படுவதற்காகவும் அவர்களை தங்களது நாட்டிலிருந்து வெளியேற்றி உங்களது நாட்டின் மீது தாக்குதல் தொடுக்கவும் அவர்கள் ஒன்றுகூடியுள்ளனர். மக்களே! இது குறித்து எனக்கு உங்களது ஆலோசனையை வழங்குகங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(அத்தவால் பத்திரிகை, வாகிஆ நிஹாவந்த் பக்கம் 192 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயமாகும். நீங்கள் அதிகமான விஷயங்களை பேசுவதையும், உங்களுக்குள் கருத்து வேறுபாடு கொள்வதையும் நாம் விரும்பவில்லை. நீங்கள் சுருக்கமாக எனக்கு ஆலோசனை வழங்குங்கள். நான் சுயமே தற்போது ஈரானிற்கு புறப்பட்டு செல்வதும், பஸ்ரா மற்றும் கூஃபாவிற்கு இடையில் ஓர் உகந்த இடத்தில் தங்கியிருந்து நமது படைக்கு நான் உதவி செய்வதும் உகந்ததாக இருக்குமா? மேலும் ஒருவேளை அல்லாஹ்வின் அருளால் இந்தப் போரில் வெற்றி கிடைத்து விட்டால் பின்னர் நமது படையை எதிரிகளின் பகுதிகளில் மேலும் முன்னேறிச் செல்வதற்கு அனுப்பி வைப்பதற்கும் அது ஏதுவாக இருக்குமா? என்பது குறித்து சுருக்கமாக எனக்கு ஆலோசனை கூறுங்கள் (என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 523 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சொற்பொழிவிற்குப் பிறகு ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். தஷஹ்ஹுத் ஓதிய பிறகு இவ்வாறு கூறினார்கள்:

அமீருல் மூமினீன் அவர்களே! நாட்டின் விவகாரங்கள் தங்களை புத்திக்கூர்மையானவராக ஆக்கி விட்டது. அனுபவங்கள் தங்களை புத்திசாலியாக்கி விட்டது. தாங்கள் விரும்பியதை செய்யுங்கள். தாங்கள் தங்களின் கருத்தின்படியே அமல் செய்யுங்கள். நாங்கள் உங்களுடன் இருக்கின்றோம். தாங்கள் எங்களுக்கு கட்டளையிடுங்கள். நாங்கள் உங்களுக்கு கட்டுப்படுவோம். எங்களை அழையுங்கள். நாங்கள் குரலுக்கு செவிமடுத்தவாறு லெப்பைக் என்று கூறுவோம். எங்களை அனுப்புங்கள். நாங்கள் புறப்பட்டுச் சென்று விடுவோம். தாங்கள் எங்களை உங்களுடன் அழைத்துச் செல்ல விரும்பினால் நாங்கள் உங்களுடன் இருப்போம். தாங்கள் சுயமே இந்த விஷயத்தில் முடிவெடுத்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் தாங்கள் முழுமையாக அறிந்தவராகவும், அனுபவம் வாய்ந்தவராகவும் உள்ளீர்கள்.

தல்ஹா அவர்கள் இதைக் கூறிவிட்டு அமர்ந்து விட்டார்கள். ஆயினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆலோசனை பெற விரும்பியிருந்தார்கள். அன்னார் (ரலி) கூறினார்கள்:

மக்களே! சிறிது பேசுங்கள். ஏனென்றால் இன்றைய சந்தர்ப்பம் எப்படிப்பட்டதென்றால் அதன் விளைவுகள் தொலைதூரமானதாகும். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் எழுந்தார்கள். மேலும் இவ்வாறு கூறினார்கள்: அமீருல் மூமினீன் அவர்களே! எனது கருத்து என்னவென்றால், தாங்கள் சிரியா மற்றும் யமனிற்கு அங்குள்ள இஸ்லாமிய படைகள் ஈரானை நோக்கி புறப்பட கட்டளைகளை அனுப்புங்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 523, 524 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதேபோன்று பஸ்ராவின் படைகளுக்கு அங்கிருந்தும் படைகள் புறப்பட்டு விட கட்டளையை அனுப்புங்கள். மேலும் தாங்கள் சுயம் இங்கிருந்து ஹிஜாஸின் படையை அழைத்துக் கொண்டு கூஃபாவை நோக்கி புறப்படுங்கள்.

(அத்தவால் பத்திரிகை, வாகிஆ நிஹாவந்த் பக்கம் 193 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அந்த நிலையில் எதிரிகளின் எண்ணிக்கை மிகுதியாக உள்ளதே என்ற அபாய உணர்வு தங்களிடமிருந்து அகன்று விடும். இந்த சந்தர்ப்பம் எப்படிப்பட்ட சந்தர்ப்பம் என்றால் இதன் விளைவுகள் நீண்ட காலம் வரை இருக்கும். எனவே இதில் தங்களின் சொந்த கருத்தும், தங்களிடன் தோழர்களுடன் தாங்கள் இருப்பதும் அவசியமாகும்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 524 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது சுயமே முன் வரிசையில் செல்ல வேண்டும். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் இந்த கருத்து மஜ்லிஸிலிருந்த பெரும்பான்மையான மக்களுக்கு பிடித்திருந்தது. இது சரி தான் என்று எல்லா புறமிருந்தும் முஸ்லிம்கள் கூறினர்.

(அத்தவால் பத்திரிகை, வாகிஆ நிஹாவந்த் பக்கம் 193 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதனையும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. மேலும் ஆலோசனை வழங்குங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் எழுந்து நின்றார்கள். ஒரு நீண்ட சொற்பொழிவை ஆற்றினார்கள். அதில் இவ்வாறு கூறினார்கள்:

அமீருல் மூமினீன் அவர்களே! தாங்கள் சிரியாவின் படையை அங்கிருந்து அகன்றுவிடும்படி கட்டளை வழங்கினால் அங்கு ரோமானியர்களின் அரசாங்கம் கைப்பற்றிக் கொள்ளும். ஒருவேளை யமனிலிருந்து இஸ்லாமிய படைகள் விலகினால் அபிஸீனிய

அரசாங்கம் அங்கு கைப்பற்றிக் கொள்ளும். தாங்கள் இங்கிருந்து புறப்பட்டீர்கள் என்றால் நாட்டின் மூலை முடுக்குகளிலிந்து முஸ்லிம்கள் தங்களின் பெயரைக்கேட்டு தங்களின் தோழமையில் சூழ்ந்து கொள்வார்கள். தாங்கள் எந்த அபாயத்தை எதிர்கொள்வதற்காக செல்கின்றீர்களோ அதை விட பெரிய அபாயம் தேசம் காலியாக இருப்பதன் காரணத்தால் இங்கேயே உருவாகி விடும்.

அதற்கு பகரமாக ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஓர் ஆலோசனையை வழங்கினார்கள். நாளை படையை மூன்று பகுதிகளாக பங்கிடுவதற்கு தாங்கள் பஸ்ராவிற்கு கட்டளை வழங்குங்கள். படையின் ஒரு பகுதி இஸ்லாமிய மக்கள் குடியிருக்கும் பகுதிகளிலும் திசைகளிலும் பாதுகாப்பிற்காக இருக்கட்டும். எந்த மக்களுடன் சமாதானம் ஏற்பட்டு விட்டதோ அந்தப் பகுதிகளில் படையின் ஒரு பகுதியை நிறுத்தி வையுங்கள். இதன் மூலம் அங்குள்ள மக்கள் உடன்படிக்கையை மீறி கிளர்ச்சி செய்யாமல் இருப்பார்கள். மேலும் படையின் ஒரு பகுதியை கூஃபாவாசிகளின் உதவிக்காக அனுப்பி வைத்து விடுங்கள் என்று கூறினார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 523, 524 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மேலும் அதேபோன்று படையின் ஒரு பகுதியை அங்கேயே தங்கியிருக்கும்படியும், படையின் இரண்டு பகுதியை எதிரியை எதிர்கொள்வதற்கு புறப்படும்படியும் கூஃபாவாசிகளுக்கு எழுதும்படி அன்னார் (ரலி) கூறினார்கள்.

இதேபோன்று சிரியா படைகளுக்கும் இந்த கட்டளையை வழங்குங்கள். அதாவது படையின் இரண்டு பகுதி சிரியாவில் தங்கியிருக்கட்டும். ஒரு பகுதி ஈரானுக்கு அனுப்பி வைக்கப்படட்டும். இதுபோன்ற கட்டளைகள் ஆட்சியாளர்கள் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகள் மற்றும் நகரங்களின் பெயர்களில் பிறப்பிக்கப்படட்டும்.

(அத்தவால் பத்திரிகை, வாகிஆ நிஹாவந்த் பக்கம் 193 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தாங்கள் போருக்கு சுயமே செல்வது எதனால் நல்லது இல்லை என்றால் தங்களின் நிலை முத்துக்கள் கோர்க்கப்பட்ட மாலையைப் போன்றதாகும். ஒருவேளை ஒரு சரம் திறந்து விட்டால் முத்துக்கள் சிதறி விடும். பின்னர் ஒருபோதும் ஒன்றுசேர்க்க முடியாது. மேலும் அரேபியர்களின் அரசர் போரில் சுயமே வந்துள்ளார் என்பது ஈரானியர்களுக்கு தெரிந்து விட்டால் அவர்கள் தமது முழு பலத்தையும் செலவிடுவார்கள். மேலும் தமது முழு ஆற்றலுடனும் போரிடுவதற்கு வருவார்கள். தாங்கள் எதிரி படையின் செயல்பாடுகளை குறித்து குறிப்பிட்டுள்ளீர்கள். தங்களின் பயணத்திற்கெதிரில் எதிரி படையின் பயணத்தை மிகவும் வெறுப்பான பார்வையுடன் இறைவன் பார்க்கின்றான். மேலும் அவன் அதாவது அல்லாஹ் எதனை விரும்பவில்லையோ அதனை மாற்றி அமைப்பதற்கு மிகவும் வல்லமை படைத்துள்ளான். மேலும் தாங்கள் எதிரிகளின் எண்ணிக்கையின் மிகுதி தொடர்பாக குறிப்பிட்டுள்ளீர்கள். கடந்த காலத்தில் நமது மரபு பெரும் எண்ணிக்கையின் அடிப்படையில் போர் புரிவதை அடிப்படையாக கொண்டிருக்கவில்லை. மாறாக, இறைவனின் உதவியின் மீதான நம்பிக்கையை அடிப்படையாக கொண்டிருந்தது. படையின் மிகுதியும், குறைவும் நமது விவகாரத்தில் வெற்றி மற்றும் தோல்வியாக அமையவில்லை. இது இறைவனின் மார்க்கமாகும். இறைவனே இதனை மேலோங்கச் செய்துள்ளான். இது அவனது படையாகும். இதற்கு அவன் உதவி செய்துள்ளான். வானவர்களின் மூலமாக அவர்களுக்கு அவன் உதவி செய்தான். அதனால் இந்த அந்தஸ்தை அது பெற்றுள்ளது. நம்மிடம் இறைவனின் வாக்குறுதி உள்ளது. அல்லாஹ் தமது வாக்குறுதியை நிச்சயம் முழுமை செய்வான். மேலும் தமது படைக்கு உதவி செய்வான்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 523 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஆம்! இது சரி தான். நான் சுயமே புறப்பட்டால் முஸ்லிம்கள் எல்லா புறமிருந்தும் இங்கு ஒன்றுகூடி விடுவார்கள். மற்றொரு பக்கம் ஈரானியர்கள் முழுமையான ஆற்றலுடன் தமது தோழர்களின் உதவிக்காக புறப்பட்டு விடுவார்கள். அரபுகளின் மாபெரும் அரசன் சுயமே போர் மைதானத்திற்கு வந்துள்ளார். நாம் இந்த போரை வெற்றி கொண்டு விட்டால் ஒரு வகையில் முழு அரபையும் வீழ்த்தி விடுவோம் என்று கூறுவார்கள். இதன் காரணமாக நான் செல்வது உகந்ததல்ல. அதாவது நாம் வெற்றி பெற்று விட்டால் முழு அரேபியாவையும் நாம் கைப்பற்றி விடலாம் என்று எதிரி கூறுவான். இதன் காரணமாக நான் செல்வது உகந்ததல்ல. எந்த நபரை தளபதியாக ஆக்குவது என்பதில் எனக்கு நீங்கள் ஆலோசனை வழங்குங்கள். ஆயினும் ஈராக் போர்களில் பங்கு பெற்று அனுபவம் பெற்றுள்ள நபரின் பெயரை கூறுங்கள்.

ஹுஸைர்! நீங்கள் சுயமே ஈராக் வாசிகளையும், அங்குள்ள படைகளைப் பற்றியும் நன்கு அறிந்துள்ளீர்கள். அங்குள்ள மக்கள் உங்களிடம் குழுவாக வந்து சென்றனர். உங்களுக்கு அவர்களை பிரித்தறிவதற்கும், அவர்களுடன் உரையாடுவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று மக்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கூறினர்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 524 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கூர்மையான பார்வை இந்த பொறுப்பிற்காக ஹஸ்ரத் நுஃமான் பின் முகர்ரன் (ரலி) அவர்களை தேர்ந்தெடுத்தது. அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெரும் தோழர்களில் ஒருவராக இருந்தார்கள்.

(அத்தவால் பத்திரிகை, வாகிஆ நிஹாவந்த் பக்கம் 193 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்கள் மஸ்ஜிதில் தொழுது கொண்டிருந்தார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வருகை தந்தார்கள். அன்னாரைக் கண்டதும் அவருக்கு அருகில் அமர்ந்து விட்டார்கள். நுஃமான் தொழுகையிலிருந்து வெளியேறினார்கள். அப்போது நான் உங்களை ஒரு பொறுப்பில் அமர்த்த விரும்புகின்றேன் என்று அன்னாரிடம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஏதாவது இராணுவ பொறுப்பாக இருந்தால் நான் ஆயத்தமாக இருக்கின்றேன். ஆனால் வரி வசூல் செய்கின்ற பணி என்றால் அது எனக்கு விருப்பமில்லை என்று ஹஸ்ரத் நுஃமான் அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், இல்லை! அது இராணுவ பொறுப்பாகும் என்று கூறினார்கள்.

(ஃபத்ஹுல் பல்தான் பக்கம் 183 – 2000 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆனால் உண்மைக்கு மிகவும் நெருக்கமானதாக தோன்றும் விஷயம் தப்ரியில் இடம் பெற்றுள்ள அறிவிப்பாகும். நிஹாவந்த் போரில் ஹஸ்ரத் நுஃமான் பின் முகர்ரன் (ரலி) அவர்களை நியமித்தது பற்றி தப்ரி நூலில் நான் கூறியதுபோன்று எழுதப்பட்டுள்ளது. அது இவ்வாறாகும்:

இப்னு இஸ்ஹாக் அவர்கள் கூறுகின்றார்கள்: நிஹாவந்த் சம்பவங்களில் இந்த குறிப்பும் இடம் பெற்றுள்ளது. நுஃமான் பின் முகர்ரன் (ரலி) அவர்கள் கஸ்கர் பகுதியில் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள்:

அதாவது சஅத் பின் அபீ வகாஸ் (ரலி) அவர்கள் ஹராஜ் வரியை வசூல் செய்வதற்கு என்னை நியமித்துள்ளார்கள். ஆனால் எனக்கோ ஜிஹாது செய்வது தான் விருப்பத்திற்குரியதாகும். எனக்கு அதன் மீதே அதிக விருப்பமும் உள்ளது என்று எழுதினார்கள். எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் சஅத் பின் அபீ வகாஸ் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு எழுதினார்கள். நீங்கள் நுஃமான் அவர்களை கராஜ் வரி வசூல் செய்வதற்கு நியமித்துள்ளதாகவும், ஆனால் அவருக்கு அந்தப் பணி விருப்பமில்லையென்றும், ஜிஹாத் புரிவதில் தமக்கு விருப்பம் உள்ளதாகவும்


**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

நுஃமான் எனக்கு கடிதம் எழுதியிருப்பதாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதில் குறிப்பிட்டார்கள். எனவே அவரை மிக முக்கியத்துவம் வாய்ந்த நிஹாவந்த் போரில் அனுப்பிவிடும்படியும் கூறினார்கள்.

சுருக்கமாக, இந்த முக்கிய பொறுப்பு ஹஸ்ரத் நுஃமான் பின் முகர்ரன் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் எதிரியை எதிர்கொள்வதற்காக புறப்பட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அன்னார் கூஃபாவில் இருந்தபோது இந்த கடிதத்தை எழுதினார்கள். கடிதம் இவ்வாறு தொடங்கியது.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். பெறுநர்: நுஃமான் பின் முகர்ரன். ஸலாமுன் அலைக்க.

தொடர்ந்து அன்னார் எழுதினார்கள்: நான் இறைவனை புகழ்கின்றேன். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு எவனும் இல்லை. அம்மா பஃது. ஈரானியர்களின் ஒரு பெரும் படை நிஹாவந்த் நகரில் உங்களை எதிர்கொள்வதற்காக ஒன்றுகூடியுள்ளது என்று எனக்கு தகவல் கிடைத்துள்ளது. எனது இந்த கடிதம் உங்களுக்கு கிடைத்து விடும்போது இறைவனின் கட்டளை மற்றும் அவனது உதவி ஒத்தாசையுடன் உங்களது முஸ்லிம் தோழர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டு விடுங்கள். ஆயினும் நடந்து செல்வதற்கு கடினமாக இருக்கும் வறண்ட பகுதிகளில் அவர்களை அழைத்துச் செல்ல வேண்டாம். அவர்கள் நன்றிகேடு காட்டாதவரை அவர்களின் உரிமைகளை வழங்குவதில் குறை வைக்க வேண்டாம். மேலும் எந்தவொரு புதைக்குழி வழிப் பகுதியாகவும் செல்ல வேண்டாம். ஏனென்றால் ஒரு முஸ்லிம் ஒரு லட்சம் தீனாரை விடவும் எனக்கு மிகவும் நேசத்திற்குரியவராவார். வஸ்ஸலாமு அலைக்க.

இந்த கட்டளைக்கு கீழ்ப்படிந்து ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்கள் எதிரிகளை எதிர்கொள்ள புறப்பட்டார்கள். அன்னாரின் தோழமையில் சில தனித்தன்மை வாய்ந்த மற்றும் மிகவும் வீரமான முஸ்லிம்கள் உதாரணமாக ஹுஸைஃபா பின் யமான், இப்னு உமர், ஜரீர் பின் அப்துல்லாஹ், முகீரா பின் ஷுஃபா, அம்ர் பின் மஃதீகரிப், துலைஹா பின் ஹுவைலத் அஸதி மற்றும் கைஸ் பின் மக்ஷூஹ் முராத் ஆகியோரும் இருந்தனர்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 518 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு வழிகாட்டல் வழங்கி இருந்தார்கள். ஒருவேளை நுஃமான் பின் முகர்ரன் ஷஹீதாகி விட்டால் பின்னர் ஹுஸைஃபா பின் யமான் அமீராக இருப்பார்கள். அன்னாருக்குப் பிறகு ஜரீர் பின் அப்தில்லாஹ் பிஜ்லி அமீராக இருப்பார்கள். அன்னாருக்குப் பிறகு முகீரா பின் ஷுஃபா மேலும் அன்னாரின் ஷஹாதத்திற்குப் பிறகு அஸ்அஸ் பின் கைஸ் என்று கூறினார்கள். அம்ர் பின் மஃதிகரிப் மற்றும் துலைஹா பின் ஹுவைலத் குறித்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நுஃமான் அவர்களுக்கு இவ்வாறு எழுதியிருந்தார்கள்: அதாவது அம்ர் பின் மஃதீகர்ப் மற்றும் துலைஹா பின் ஹுவைலத் இருவரும் உங்களிடம் உள்ளனர். இவர்கள் இருவரும் அரபின் இளவரசர்களாவர். அவர்களிடம் போர் விவகாரங்களில் ஆலோசனை பெற்று வாருங்கள். ஆயினும் எந்தவொரு பணியிலும் அவர்களை அதிகாரியாக ஆக்க வேண்டாம்.

(அத்தவால் பத்திரிகை, வாகிஆ நிஹாவந்த் பக்கம் 194 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இஸ்லாமிய படை புறப்பட்டது. ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்கள் ஒற்றர்கள் மூலமாக நிஹாவந்த் வரை அதாவது எங்கு எதிரிகளின் படை ஒன்றுகூடியிருந்ததோ அதுவரை வழிப்பாதை சரியாக உள்ளது என்பதை அறிந்து கொண்டார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 525 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதற்கு முன்பு கிடைத்த தகவல்களிலிருந்து எதிரி பெரும் எண்ணிக்கையில் ஒன்றுகூடுகின்றான் என்றே தெரிந்திருந்தது. இந்த படையின் எண்ணிக்கை 60000 ஆயிரம் என்றும், ஒரு லட்சம் என்றும் வரலாற்றாசிரியர்கள் எழுதியுள்ளனர்.

(பத்ஹுல் பல்தான் பக்கம் 183 – 2000 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆனால் புகாரியின் அறிவிப்பிற்கேற்ப அந்த எண்ணிக்கை 40000 ஆக இருந்தது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜிஸ்யா... ஹதீஸ் எண் 3159)

அதாவது முன்னர் கூறப்பட்ட 60000 அல்லது லட்சம் என்பது மிகையாகும். புகாரி அறிவிப்பிற்கேற்ப எதிரிகளின் எண்ணிக்கை 40000 ஆக இருந்தது. ஒரு நபரை பேச்சு வார்த்தைக்கு அனுப்ப வேண்டுமென்று எதிரி விரும்பினான். ஹஸ்ரத் முகீரா பின் ஷுஃபா சென்றார்கள். ஈரானியர்கள் பெரும் பொலிவுடன் கூட்டத்தை கூட்டியிருந்தார்கள். ஈரானிய படைத்தளபதிகள் தலையில் கிரீடத்தை அணிந்து தங்க அரியணையில் அமர்ந்திருந்தார்கள். அரசவையில் இருந்தவர்கள் எப்படிப்பட்ட ஆயுதங்களை தொங்க விட்டு அமர்ந்திருந்தார்கள் என்றால் அதனைக்கண்டு பார்ப்பவர்களின் கண்கள் கூசின. மொழிபெயர்ப்பாளர் இருந்தார். ஈரானிய படைத்தளபதிகள் அதே பழைய கதைகளை மீண்டும் கூறினர். அரபுவாசிகளின் வாழ்க்கை எல்லா அம்சங்களின் அடிப்படையிலும் கீழான நிலையில் இருந்ததாக குறிப்பிட்டார்கள். மேலும் எனக்கு அருகில் அமர்ந்துள்ள தலைவர்களை உங்களை கொல்வதற்கு நான் ஏன் கட்டளை வழங்கவில்லை என்றால் உங்களின் அசுத்தமான உடலால் இவர்களின் வாள்கள் அசுத்தமாகி விடக்கூடாது. எனவேதான் கட்டளையிடவில்லை. (நவூதுபில்லாஹ்). இப்போதும் கூட நீங்கள் திரும்பிச் சென்று விட்டால் நாங்கள் உங்களை விட்டு விடுவோம். இல்லையென்றால் போர் மைதானத்தில் உங்களின் சடலங்கள் தென்படும் என்றும் அவன் கூறினான். எதிரி இந்த ஏளனத்திற்குரிய மிரட்டலை விடுத்தான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகைக்கு முன்னர் இருந்த அந்த காலம் சென்று விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகை வரைபடத்தையே மாற்றி விட்டது என்று ஹஸ்ரத் முகீரா (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 520 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இராஜதந்திர நடவடிக்கை தோல்வியுற்றது. எவ்வாறிருப்பினும் இரண்டு படைகளும் போர் புரிவதற்கு ஆயத்தமாகின. இஸ்லாமிய படையின் முதல் வரிசையில் நயீம் பின் முகர்ரன் நியமிக்கப்பட்டிருந்தார்கள். துணைப் படைகளின் தலைமை பொறுப்பு ஹுஸைஃபா பின் யமான் மற்றும் சுவைத் பின் முகர்ரன் ஆகியோரின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டது. கஃகா பின் அம்ர் அவர்கள் முஜர்ரதாவின் அதிகாரியாக இருந்தார்கள். முஜர்ரதா என்பது குதிரை சவாரிகளின் முன்னணியில் இருக்கும் குதிரை சவாரிகளுக்கு கூறப்படும். படையின் பின் பகுதி முஜாஷிஃ என்பவரின் தலைமைப் பொறுப்பில் இருந்தது.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 525 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

படைகளின் தாக்குதல்கள் ஆரம்பமாகியிருந்தன. ஆனால் போர் மைதானத்தின் நிலை முஸ்லிம்களுக்கு மிகவும் துன்பளிக்கக்கூடியதாக இருந்தது. ஏனென்றால் எதிரி அகழ்கள், கோட்டைகள் மற்றும் வீடுகளின் காரணமாக பாதுகாப்பாக இருந்தான். முஸ்லிம்கள் திறந்த வெளி மைதானத்தில் இருந்தனர். எதிரி தமக்கு உகந்ததாக கருதிய நேரத்தில் திடீரென வெளியேறி தாக்குதல் நடத்தி வந்தான். பின்னர் திரும்பிச் சென்று தமது பாதுகாப்பான இடங்களில் நுழைந்து விடுவான்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 526 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆயுதங்களின் அடிப்படையில் எதிரியின் நிலைமை இவ்வாறு இருந்ததாக ஓர் அறிவிப்பாளர் கூறுகின்றார்: நான் அதனை ஓரிடத்தில் கடந்து செல்வதை பார்த்தேன். அவை இருப்பின் மலைகளைப் போன்று தெரிந்தன.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 520 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த நிலைகளைப் பார்த்து விட்டு இஸ்லாமிய படையின் தளபதி நுஃமான் பின் முகர்ரன் அவர்கள் ஆலோசனைக்காக மஜ்லிஸை கூட்டினார்கள். அதில் படையில் அனுபவம் வாய்ந்த மேலும் திட்டங்களை வகுக்கக்கூடிய மக்களை அழைத்தார்கள். மேலும் அவர்களை நோக்கி இவ்வாறு கூறினார்கள்: எதிரி எவ்வாறு தமது கோட்டைகளிலும், அகழ்களிலும், கட்டிடங்களின் காரணமாகவும் பாதுகாப்பாக அமர்ந்துள்ளான் என்பதை நீங்கள் பார்த்துக் கொண்டு வருகின்றீர்கள். அவர்களுக்கு விருப்பம் இருக்கும்போது அவன் வெளியேறுகின்றான். மேலும் எதிரி தமது விருப்பத்துடன் வெளியேறி சுயமே போரிடாதவரை முஸ்லிம்களால் அவர்களுடன் போரிட முடியவில்லை.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 526 – 2012

ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இங்கிருந்தும் அங்கிருந்தும் தொடர்ந்து எதிரிக்கு உதவி படைகளும் கிடைத்து வருகின்றன.

(அத்தவால் பத்திரிகை, வாகிஆ நிஹாவந்த் பக்கம் 194 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னார் கூறினார்கள்: முஸ்லிம்கள் இந்த நிலையில் எந்த கஷ்டத்தால் சூழப்பட்டிருக்கின்றார்கள் என்பதை நீங்கள் பார்த்து வருகின்றீர்கள். இப்போது நாம் என்ன வழிமுறையை மேற்கொள்ள வேண்டும்? காலம் தாழ்த்தாமல் எதிரியை திறந்த வெளி மைதனாத்திற்கு வந்து போரிடும் நிர்பந்தத்திற்கு நாம் ஆளாக்க வேண்டும். அதற்கு நாம் என்ன செய்வது? படைத்தளபதியின் இந்த கூற்றை கேட்டு அந்த கூட்டத்திலிருந்த எல்லோரையும் விட வயதில் மூத்த நபர் அம்ர் பின் சுபை இவ்வாறு கூறினார்: அவர்கள் கோட்டைக்குள் ஒளிந்திருக்கின்றார்கள். முற்றுகை நீண்டு கொண்டே செல்கின்றது. இந்த விஷயம் இஸ்லாமிய படையை விட எதிரிக்கு மிக அதிகமான கஷ்டத்தையும், துன்பத்தை சேர்க்கின்றது. எனவே தாங்கள் இவ்வாறே செல்ல விடுங்கள். முற்றுகையை நீட்டிக் கொண்டே செல்லுங்கள். ஆயினும் அவர்களில் எவர்கள் போரிட வெளியேறுகின்றார்களோ அவர்களுடன் போரை தொடர்ந்து கொண்டே இருப்போம். ஆனால் ஆனால் அம்ர் பின் குபையின் இந்த ஆலோசனையை குழுவினர் ஒப்புக் கொள்ளவில்லை.

அதன் பிறகு அம்ர் பின் கர்ப் இவ்வாறு கூறினார்: பதற்றப்படுவதற்கும், அஞ்சுவதற்கும் எந்த விஷயமும் இல்லை. முழு வலிமையுடன் முன்னேறிச் சென்று எதிரி மீது தாக்குதல் தொடுக்க வேண்டும் என்று கூறினார்கள். ஆனால் இந்த ஆலோசனையும் நிராகரிக்கப்பட்டது.

முன்னேறிச் சென்று தாக்குதல் நடத்தினால் நாம் மனிதர்களை எதிர்கொள்ள மாட்டோம். மாறாக, சுவர்களில் மோதிக் கொள்ள நேரிடும் என்றும் அனுபவம் வாய்ந்தவர்கள் ஆட்சேபனை செய்தார்கள். இந்த சுவர்கள் நமக்கு எதிராக எதிரிக்கு உதவி செய்கின்றன.

அதாவது அவர்கள் கோட்டைக்குள் இருந்தனர். எதிரி முன்னால் நிற்கவில்லை. அப்போது துலைஹா எழுந்து நின்று இவ்வாறு கூறினார்கள்:

என்னைப் பொருத்தவரை இந்த இரண்டு நபர்களின் கருத்தும் சரியானதல்ல. எனது கருத்து என்னவென்றால், ஒரு சிறிய படையை எதிரியை நோக்கி அனுப்பி வைப்போம். அவர்கள் அருகில் சென்று அம்புகளை எய்து, போர் புரியும்படி தூண்டி விடும் சூழலை உருவாக்கட்டும். இந்த சிறு படையை எதிர்கொள்வதற்கு எதிரி வெளியே வருவான். மேலும் நமது சிறு படையுடன் போரிடுவான். அந்நிலையில் நமது சிறு படை பின்வாங்கத் தொடங்கி விடட்டும். அதாவது தோல்வியுற்று ஓடுவதைப் போன்ற ஒரு நிலையை வெளிப்படுத்தட்டும். அந்நிலையில் எதிரி வெற்றியின் ஆசையில் வெளியேறி விடுவான். அவன் திறந்தவெளி மைதானத்தில் வந்துவிடும்போது நாம் அவர்களை நல்ல முறையில் எதிர்கொண்டு விடலாம் என்று கூறினார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 526 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்கள் இந்த ஆலோசனையை ஏற்றுக் கொண்டார்கள். மேலும் அதனை ஹஸ்ரத் கஃகா (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். இந்த ஆலோசனையை செயல் வடிவம் கொடுக்கும்படி அன்னாரிடம் கூறினார்கள். அன்னார் துலைஹாவின் ஆலோசனையின்படி செயல்பட்டார்கள். துலைஹா அவர்கள் கருதியபடியே அனைத்தும் அப்படியே வெளிப்பட்டது. கஃகா மெல்ல மெல்ல தோல்வியுற்று பின்வாங்கிக் கொண்டு சென்றார்கள். எதிரியின் படை வெற்றியின் போதையில் முன்னேறிக் கொண்டே வந்தது. எந்த அளவுக்கென்றால் அனைவரும் தனது கோட்டைகளிலிருந்து வெளியே வந்து விட்டார்கள். வாசல்களில் நியமிக்கப்பட்டிருந்த காவலாளிகள் மட்டும் காவல் காப்பதற்காக இருந்தார்கள். எதிரியின் படை தமது உறுதியான நிலையிலிருந்து வெளியேறி உள்நோக்கி சென்றது. அசல் இஸ்லாமிய படைக்கு எந்த அளவுக்கு நெருக்கமாக வந்து விட்டதென்றால் அதன் அம்புகளால் சில முஸ்லிம்களும் காயமுற்றனர். ஆனால் ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்கள் இன்னும் வெளிப்படையான தாக்குதலுக்கு அனுமதி வழங்கியிருக்கவில்லை. ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நேசராக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழக்கமாக இது இருந்தது. ஒருவேளை காலையில் போர் தொடங்காவிட்டால் பின்னர் நண்பகலுக்கு பின்பு போர் நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். அப்போது வெப்பம் அதிகமாக இருப்பதில்லை. மேலும் குளிர்ந்த காற்று வீசி வந்தது. சில முஸ்லிம்கள் தாக்குதல் தொடுப்பதற்கு நிம்மதி இழந்திருந்தார்கள். எதிரிகளின் அம்புகளால் கொஞ்சம் மக்கள் காயமுற்றதன் காரணமாக இந்த உணர்வு இன்னும் அதிகரித்து விட்டது. அவர்கள் படையின் தலைவரிடம் சென்று அனுமதி வேண்டினார்கள். இன்னும் சிறிது காத்திருங்கள் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அதாவது மேலும் காத்திருங்கள் என்று படைத்தளபதி அவர்களிடம் கூறினார்.

நான் இருந்திருந்தால் தாக்குதலுக்கு அனுமதி வழங்கியிருப்பேன் என்று பொறுமையிழந்து ஹஸ்ரத் முகீரா பின் ஷுபா (ரலி) அவர்கள் கூறிவிட்டார்கள். இன்னும் சிறிது நேரம் பொறுமை செய்யுங்கள் என்று ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்கள் கூறினார்கள். நிச்சயமாக நீங்கள் அமீராக இருந்தபோது அழகிய ஏற்பாட்டை செய்திருந்தீர்கள். ஆனால் இன்றும் இறைவன் எம்மையும், உங்களையும் இழிவுபடுத்த மாட்டான். எந்த விஷயத்தை நீங்கள் அவசரம் காட்டி பெற விரும்புகின்றீர்களோ அதனை நாம் பொறுமையுடன் பணி செய்து பெற விரும்புகின்றோம்.

நண்பகல் முடியும் நேரத்தில் ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்கள் குதிரையின் மீது சவாரி செய்து முழு படையையும் சுற்றி வலம் வந்தார்கள். ஒவ்வொரு கொடிக்கு அருகிலும் நின்று கொண்டு மிகவும் உணர்வுப்பூர்வமான சொற்பொழிவை ஆற்றினார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 526, 527 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மிகவும் வேதனைமிகு சொற்களில் தமது ஷஹாதத்திற்காக துஆ செய்தார்கள். அதனைக் கேட்டு மக்கள் அழத் தொடங்கினர். அதன் பிறகு அன்னார் இவ்வாறு கட்டளையிட்டார்கள்: நான் மூன்று முறை தக்பீர் கூறுவேன். அத்துடன் கொடியை அசைப்பேன். முதல் முறை அனைவரும் தயாராகி விட வேண்டும். இரண்டாவது முறை ஆயுதத்தை தாங்கிக் கொள்ள வேண்டும். அதாவது ஆயுதங்களை தயாராக வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் எதிரியின் மீது தாக்குதல் தொடுப்பதற்கு முற்றிலும் ஆயத்தமாகி விட வேண்டும். மூன்றாவது முறை தக்பீர் கூறியதும் கொடியை அசைத்தவுடன் எதிரியின் வரிசைகளில் புகுந்து நாம் தாக்குதல் தொடுத்து விடுவோம். உங்களில் ஒவ்வொரு நபரும் தனக்கு எதிரில் இருக்கும் எதிர் வரிசையின் மீது தாக்குதல் தொடுக்க வேண்டும்.

அதன் பிறகு இவ்வாறு துஆ செய்தார்கள்: இறைவா! உனது மார்க்கத்திற்கு கண்ணியம் அளிப்பாயாக. உனது அடியார்களுக்கு உதவி செய்வாயாக. இதற்கு பகரமாக நுஃமானிற்கு முதல் ஷஹீதாக ஆகுவதற்கு நற்பேறு வழங்குவாயாக என்று துஆ செய்தார்கள். அதாவது படைத்தளபதி இவ்வாறு துஆ செய்தார்.

ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்கள் முஸ்லிம்கள் எதிரியின் படை வரிசையில் புகுந்து விட வேண்டும் என்று மூன்றாவது முறை தக்பீர் கூறியிருந்தார்கள். அறிவிப்பாளர் கூறுகின்றார்:

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)


*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

***1800 103 2131***

இந்த **TOLL FREE** எண்ணில் ∴போன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

உத்வேகத்திற்கான எப்படிப்பட்ட ஒரு நிலை இருந்ததென்றால், வெற்றியை பெறாமல் திரும்பிச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் உடையவராக ஒருவர் இருந்தார் என்று எவரைக் குறித்தும் கற்பனை செய்து பார்க்க முடியாது. நுஃமான் அவர்கள் சுயமே கொடியை ஏந்தி எதிரியின் மீது எவ்வளவு விரைவாக தாக்குதல் தொடுத்தார்கள் என்றால் பார்க்கக்கூடியவர்களுக்கு அது கொடியாக தெரியவில்லை. மாறாக, ஒரு கழுகு கீழிறங்கி தாக்குவதைப்போன்று தென்பட்டது. சுருக்கமாக, முஸ்லிம்கள் வாள்களை ஏந்திக் கொண்டு ஒன்றாக சேர்ந்து தாக்குதல் தொடுத்தனர். ஆயினும் எதிரியின் படை வரிசையும் அந்த தாக்குதலுக்கு எதிரில் நிலைகொண்டு இருந்தது. இரும்பும், இரும்பும் மோதிக் கொண்டதால் கடுமையான சப்தம் வந்து கொண்டிருந்தது. நிலத்தில் இரத்தம் வடிந்ததன் காரணத்தால் முஸ்லிம் குதிரை சவாரிகளின் குதிரைகள் வழுகத் தொடங்கின. ஹஸ்ரத் நுஃமான் அவர்கள் போரில் காயமுற்றிருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்களின் குதிரையும் வழுகியது. அன்னார் நிலத்தில் விழுந்து விட்டார்கள். அன்னார் (ரலி) தனது வெள்ளை நிற அங்கி மற்றும் தொப்பியின் காரணமாக தனித்தவராக தென்பட்டார்கள். அன்னாரின் சகோதரர் நயீம் பின் முகர்ரன் அன்னார் கீழே விழுவதைப் பார்த்தபோது மிகவும் புத்திசாலித்தனமாக கொடி விழுவதற்கு முன்பாகவே பிடித்து விட்டார்கள். ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்களை துணி கொண்டு மறைத்தார்கள். கொடியை எடுத்துக் கொண்டு ஹுஸைஃபா பின் யமான் அவர்களிடம் வந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்களின் பிரதிநிதியாக இருந்தார்கள். எங்கு ஹஸ்ரத் நுஃமான் (ரலி) இருந்தார்களோ அங்கு ஹஸ்ரத் ஹுஸைஃபா நயீம் பின் முகர்ரமை அழைத்துக் கொண்டு வந்தார்கள். அந்த இடத்தில் கொடியை உயர்த்திப் பிடித்தார்கள். ஹஸ்ரத் முகீரா (ரலி) அவர்களின் ஆலோசனைக்கேற்ப போர் முடிவுக்கு வரும் வரை ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்களின் மரணம் மறைவாக வைக்கப்பட்டது.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 521, 527 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அத்தவால் பத்திரிகை இவ்வாறு எழுதியுள்ளது: ஹஸ்ரத் நுஃமான் பின் முகர்ரன் (ரலி) காயமுற்று கீழே விழுந்தபோது அன்னாரின் சகோதரர் அன்னாரை தூக்கிக் கொண்டு கூடாரத்திற்கு கொண்டு சென்றார். அன்னாரின் உடையை சுயமே அணிந்து கொண்டார். அன்னாரின் வாளை எடுத்துக் கொண்டு அன்னாரின் குதிரையில் சவாரி செய்தார். இவர் ஹஸ்ரத் நுஃமான் ஆவார் என்றே பெரும்பாலான மக்கள் தவறாக புரிந்து கொண்டனர்.

(அத்தவால் பத்திரிகை, வாகிஆ நிஹாவந்த் பக்கம் 195 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தப்ரி வரலாற்று ஆசிரியர் மிகவும் அபாயகரமான நேரத்தில் அமீரின் கட்டளைக்கு கட்டுப்படுதலின் அழகிய உதாரணத்தை எழுதியுள்ளார். ஒருவேளை நுஃமானும் கொலை செய்யப்பட்டு விட்டால் எந்த நபரும் போரை விட்டு விட்டு அவரின் பக்கம் கவனம் செலுத்தக்கூடாது. மாறாக, எதிரியுடன் போரை தொடர வேண்டும் என்று ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்கள் அறிவிப்பு செய்திருந்தார்கள்.

முஅக்கல் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நுஃமான் அவர்கள் கீழே விழுந்ததும் நான் அன்னாருக்கு அருகில் வந்தேன். அப்போது அன்னாரின் கட்டளை எனக்கு நினைவிற்கு வந்தது. எனவே நான் திரும்பிச் சென்று விட்டேன். மேலும் போரிடத் தொடங்கி விட்டேன்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 533 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் பகல் முழுவதும் மிகவும் வலிமையுடன் போர் தொடர்ந்தது. ஆனால் இரவு ஆனவுடன் எதிரியின் பாதங்கள் தடுமாறின. மைதானம் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்தது. மேலும் ஈரானியர்களின் பெரும் பெரும் தலைவர்கள் கொலை செய்யப்பட்டனர்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 527, 528 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முஅக்கல் கூறுகின்றார்கள்: வெற்றிக்குப் பிறகு நான் ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்களிடம் சென்றேன். அன்னாரின் உயிர் சற்று எஞ்சியிருந்தது. சிறிது மூச்சு வாங்கிக் கொண்டிருந்தார்கள். நான் அன்னாரின் முகத்தை தண்ணீரால் கழுவினேன். அன்னார் எனது பெயரைக் கேட்டார்கள். மேலும் முஸ்லிம்களின் நிலை என்ன? என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் புறமிருந்து வெற்றி மற்றும் உதவிக்கான நற்செய்தி உங்களுக்கு உண்டாகட்டுமாக என்று நான் கூறினேன். அல்ஹம்துலில்லாஹ்! உமருக்கு தகவல் கொடுத்து விடுங்கள் என்று அன்னார் கூறினார்கள்.

(ஃபத்ஹுல் பல்தான் பக்கம் 183 – 2000 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் ஆர்வத்துடன் போரின் முடிவை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்தார்கள். எந்த இரவில் போர் நடைபெறும் என எதிர்பார்ப்பு இருந்ததோ அந்த இரவில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் நிம்மதியிழந்து விழித்திருந்தார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 528 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஒரு கர்ப்பிணி பெண் வேதனையில் இருப்பதுபோன்று வேதனையுடன் அன்னார் துஆவில் மும்முரமாக இருந்ததாக தெரிய வருகின்றது. தூதுவர் வெற்றிக்கான நற்செய்தியுடன் மதீனா வந்தடைந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அல்ஹம்துலில்லாஹ் என்று கூறி ஹஸ்ரத் நுஃமான் (ரலி) அவர்களின் உடல்நலத்தை குறித்து கேட்டறிந்தார்கள். தூதுவர் அன்னாரின் மரணச் செய்தியை கூறியபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கடுமையான வேதனை ஏற்பட்டது.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 521 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மேலும் தலையில் கை வைத்து அழுது கொண்டிருந்தார்கள்.

(ஃபத்ஹுல் பல்தான் பக்கம் 184 – 2000 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தூதுவர் ஏனைய ஷஹீதுகளின் பெயரையும் கூறினார். அமீருல் மூமினீன் அவர்களே! இன்னும் ஏராளமான முஸ்லிம்கள் ஷஹீதாகி உள்ளனர். அவர்களை தாங்கள் அறிவதில்லை என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழுதவாறு, அவர்களை உமர் அறியாவிட்டால் அவர்களுக்கு எந்த நஷ்டமும் இல்லை. இறைவன் அவர்களை அறிவான் என்று கூறினார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 521 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

முஸ்லிம்களில் அறியாத சிலரும் இருந்தனர். ஆனால் இறைவன் அவர்களுக்கு ஷஹாதத் வழங்கி கண்ணியப்படுத்தி விட்டான். அல்லாஹ் அவர்களை அறிகின்றான். உமர் அவர்களை அறிவதால் என்னவாகி விடப்போகிறது? போருக்குப் பிறகு முஸ்லிம்கள் ஹம்தான் வரை எதிரிகளை பின்தொடர்ந்து சென்றார்கள். இதைப் பார்த்த ஈரானிய தலைவரான ஸுஸ்ர் வ ஷனூம் என்பவன் ஹம்தான் மற்றும் தஸ்தபி நகரங்களின் சார்பாக இந்த நிபந்தனையின் கீழ் சமாதானம் செய்து கொண்டான். இந்த நகரங்களிலிருந்து முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுக்கப்படாது என்று உறுதிமொழி கொடுத்தார். இஸ்லாமிய படை நிஹாவந்த் நகரத்தை கைப்பற்றி விட்டது.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 528 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

நிஹாவந்த் வெற்றி தமது விளைவின் அடிப்படையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இதற்குப் பிறகு ஈரானியர்கள் ஓரிடத்தில் ஒன்றுகூடி போரிடுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. முஸ்லிம்கள் இந்த வெற்றியை ஃபத்ஹுல் ஃபுதூஹ் என்ற பெயரால் நினைவு கூருகின்றனர்.

(ஃபத்ஹுல் பல்தான் பக்கம் 184 – 2000 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஈரான் மீது படையெடுப்பதற்கு ஆலோசனை செய்யப்பட்டது. எவ்வாறு நிகழ்ந்தது? இது குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஒழுக்க ரீதியிலும், சட்டத்தின் பார்வையின் அடிப்படையிலும் முஸ்லிம்களுக்கு இந்த விஷயத்தை செய்வதற்கு முழுமையான அதிகாரம் இருந்தது. அதாவது எதிரிகளின் அசுர பலத்தை முழுமையாக முறியடிப்பதற்கு அனுமதி இருந்தது. ஏனென்றால் எதிரி மீண்டும் மீண்டும் தாக்குதல் நடத்தி வந்தான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வேதனைமிகு உள்ளம் ஒவ்வொரு கட்டத்திலும் மேலும் இரத்தம் சிந்துவதை வெறுத்து வந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இந்த விஷயம் (போர்) பிடித்திருக்கவில்லை. மேலும் ரஹ்மத்துல்லில் ஆலமீன் (ஸல்) அவர்களின் உண்மையான தொண்டராகிய அந்த நபரின் உள்ளத்து ஆசை இவ்வாறாக இருந்தது. அதாவது ஈரானிய அரசாங்கத்தின் எல்லைப்புற பகுதிகளிலேயே கூடுதல் இராணுவ

நடவடிக்கைகளை அவர்கள் முடித்துக் கொள்ள வேண்டும் என்றும், சண்டை மற்றும் போருக்கான தொடர் முடிவுக்கு வர வேண்டும் என்றும் அன்னாரின் உள்ளம் விரும்பியது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த ஆசையை பல முறை வெளிப்படுத்த மட்டும் செய்யவில்லை. மாறாக, ஈரான் மற்றும் ஈராக்கின் படைகளை சுயமே எந்தவொரு இராணுவ நடவடிக்கையை முன்னெடுப்பத்திலிருந்து முற்றிலும் தடை செய்திருந்தார்கள். ஆனால் எதிரியின் கூடுதல் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகளில் மீண்டும் மீண்டும் கிளர்ச்சி செய்ய தூண்டியது ஆகியவற்றின் காரணமாக அன்னாரின் இந்த ஆசை முழுமை பெற முடியவில்லை. மேலும் மிஹாஸ் போரிலிருந்து வந்திருந்த சிந்திக்கும் தலைவர்களின் ஒரு குழுவுடன் உரையாடிய பிறகு அன்னார் இந்த முடிவிற்கு வந்திருந்தார்கள். அதாவது கூடுதல் இராணுவ நடவடிக்கையை தவிர்த்து வேறு வழியில்லை என்று உணர்ந்திருந்தார்கள். இது ஹிஜ்ரி 17 ஆம் ஆண்டு சம்பவமாகும். ஆனால் இதற்குப் பிறகும் கூட ஒரு நீண்ட காலம் வரை அன்னார் படைகளை முன்னேறிச் செல்வதற்கு அனுமதி வழங்கவில்லை. ஆனால் ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று தற்போது அதற்கான நிலைமை உருவாகி விட்டதால் மேலும் பொறுமை செய்வதற்கு அன்னார் அனுமதி வழங்கவில்லை.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்த விஷயத்தை பார்த்திருந்தார்கள். யஸவ் ஜஸவ் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் படையை அனுப்பி போருக்கான நெருப்பை மூட்டுவதற்கு காரணியாக இருந்து வந்தான். மக்கள் மீண்டும் மீண்டும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், அவனது ஆட்சி இருக்கும் வரை இந்த நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்படாது என்று கூறி வந்தார்கள். தற்போது நிஹாவந்த் போர் இந்த கருத்தை மேலும் உறுதிப்படுத்தியது. இந்த நிலைமைகளால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நிர்பந்தத்திற்குள்ளாகி நிஹாவந்த் போருக்கு அதாவது ஹிஜ்ரி 21 ஆம் ஆண்டிற்குப் பிறகு இராணுவ நடவடிக்கைக்கு அனுமதி வழங்கி விட்டார்கள். மேலும் முழு ஈரானையும் வெற்றி கொள்வதற்கு திட்டத்தை உருவாக்கி படையை கூஃபாவை நோக்கி அனுப்பி வைத்தார்கள். அந்தப் படை போர் நடவடிக்கைகளுக்கு தேவையான முகாம்களை அமைத்திருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஈரானின் பல்வேறு பகுதிகளுக்கு பல தரப்பட்ட தளபதிகளை நியமித்தார்கள். மேலும் மதீனாவிலிருந்து சுயமே கொடியை உருவாக்கி அனுப்பி வைத்தார்கள். ஹராஸானின் கொடி அஹ்னஃப் பின் கைஸ் அவர்களிடமும், அஸ்ஸஹரின் கொடி உஸ்மான் பின் அபூ ஆஸ் அவர்களிடமும், அர்துஷீர் மற்றும் சாபூர் கொடி முஜாஷிஹ் பின் மஸ்ஊத் அவர்களிடமும், ஃபஸா மற்றும் தாராபஜீர் கொடி தகாஸார்யா பின் ஸுனீம் அவர்களிடமும், ஸஜிஸ்தானின் கொடியை ஆஸிம் பின் அம்ர் அவர்களிடமும், மக்ரான் கொடியை ஹகம் பின் அம்ர் அவர்களிடமும் அனுப்பினார்கள். கர்மானின் கொடியை ஸுஹைல் பின் அதீயிடமும் கொடுத்தார்கள். ஆஸார் பைஜான் வெற்றிக்காக உத்பா பின் ஃபர்கத் மற்றும் பகீர் பின் அப்தில்லாஹ் அவர்களையும் அனுப்பினார்கள். மேலும் ஒருவர் ஆஸார் பைஜான் மீது வலது பக்கம் ஹுல்வான் என்ற இடத்திலிருந்து தாக்குதல் நடத்தும்படியும், மற்றொருவர் இடது பக்கத்திலிருந்து மூஸல் என்ற இடத்திலிருந்து தாக்குதல் நடத்தும்படியும் கட்டளையிட்டார்கள். அஸ்ஃபஹானின் திட்டத்தின் கொடியை அப்துல்லாஹ் பின் அப்தில்லாஹ்விற்கு வழங்கினார்கள்.

(ஸய்யிதுனா உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 164–166 – பாகிஸ்தானிலுள்ள அல்ஃபுர்கான் கான் கட் அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

அஸ்ஃபஹான் வெற்றி குறித்து எழுதப்பட்டுள்ளது: அஸ்ஃபஹானின் திட்டம் அப்துல்லாஹ் பின் அப்தில்லாஹ் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்னார் நிஹாவந்த் என்ற இடத்தில் இருந்தபோது அஸ்ஃபானை நோக்கி புறப்படும்படி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கடிதம் கிடைத்தது. எல்லா முதல் நிலை படைக்கும் தளபதியாக அப்துல்லாஹ் பின் வர்கா அவர்களை நியமிக்கும்படியும் கூறியிருந்தார்கள். துணை படைகளின் தலைவராக அப்துல்லாஹ் பின் வர்கா அஸதியையும், இஸ்மா பின் அப்தில்லாஹ் அவர்களையும் நியமிக்கும்படி கூறியிருந்தார்கள். அப்துல்லாஹ் அவர்கள் புறப்பட்டார்கள். நகரத்தின் வெளிப்புறங்களில் அஸ்ஃபஸான் வாசிகளுடன் ஒரு படையுடன் போர் நடந்தது. அந்த படை ஈரானிய படைத்தளபதி உஸ்தன்தார் என்பவரின் தலைமையில் இருந்தது. எதிரியின் ஒவ்வொரு முதல் நிலை அதிகாரி அதாவது முதல் படையின் அதிகாரி ஓர் அனுபவம் வாய்ந்தவரும், முதியவருமான ஹாஹிர் புராஸ் ஜாஸ்வியா இருந்தார். அவன் தமது படைகளை அழைத்துக் கொண்டு முஸ்லிம்களை எதிர்கொண்டான். கடுமையான போர் நிகழ்ந்தது. ஜாஸ்விய்யா அடைக்கலம் வேண்டினான். அப்துல்லாஹ் பின் வர்கா அவர்கள் அவனை மரணத்தின் குழியில் இறக்கினார்கள். கடுமையான போருக்குப் பிறகு எதிரி தோல்வியுற்று ஓடி விட்டான். உஸ்தன்தார் அப்துல்லாஹ் பின் அப்தில்லாஹ் அவர்களிடம் சமாதானம் செய்து கொண்டான். இஸ்லாமிய படை குறிப்பாக அஸ்ஃபஹானை நோக்கி முன்னேறியது. அது ஜுயி என்ற பெயரால் அழைக்கப்பட்டது. நகரம் முற்றுகையிடப்பட்டது. ஒரு நாள் ஃபாஸூ ஸஃபான் என்ற நகரத்தின் ஆட்சியாளர் வெளியே வந்தார். இஸ்லாமிய படைத்தலைவரான அப்துல்லாஹ் பின் அப்தில்லாஹ்விடம் நமது படைகள் போரிடுவதற்கு பகரமாக நாம் இருவரும் நமக்குள் போரிடுவது சிறந்ததாகும். எவர் தமது எதிரியை வீழ்த்தி விடுவாரோ அவர் வெற்றி பெற்றவராக கருதப்படுவார் என்றும் கூறினார்.

அப்துல்லாஹ் அவர்கள் இந்த ஆலோசனையை ஒப்புக் கொண்டார்கள். மேலும் முதலில் நீங்கள் தாக்குதல் நடத்துவீர்களா? அல்லது நானா? என்று கேட்டார்கள். ஃபாஸூ ஸஃபான் முதலில் தாக்குல் தொடுத்தான். அப்துல்லாஹ் அவர்கள் தாக்குதலை எதிர்கொண்டு நிலைபெற்றிருந்தார்கள். மேலும் எதிரியின் தாக்குதலால் அன்னாரின் குதிரையின் கடிவாளம் மட்டுமே உடைந்திருந்தது. அப்துல்லாஹ் அவர்கள் குதிரையின் திறந்த முதுகில் ஏறி அமர்ந்து கொண்டார்கள். மேலும் தாக்குதல் நடத்துவதற்கு முன்பு, இப்போது நிலை நிற்கவும் என்று அவனிடம் கூறினார்கள். தாங்கள் முழுமையான கல்வியறிவு கொண்ட வீரமான மனிதர் ஆவீர்கள். நான் உங்களுடன் சமாதானம் செய்து நகரத்தை உங்களிடம் ஒப்படைப்பதற்கு தயாராக உள்ளேன் என்று ஃபாஸூ ஸஃபான் கூறினான். ஆக சமாதானம் ஏற்பட்டு விட்டது. முஸ்லிம்கள் நகரத்தை கைப்பற்றி கொண்டனர். இந்த வெற்றி ஹிஜ்ரி 21 ஆம் ஆண்டு நிகழ்ந்தது என்று தப்ரியிலிருந்து தெரிய வருகிறது.

(தப்ரி தொகுதி 2 பக்கம் 531–532)

பலாஸரி என்ற வரலாற்று ஆய்வாளர் இந்த போரில் பங்கு பெறக்கூடிய இஸ்லாமிய படையின் தலைவர் அப்துல்லாஹ் பின் அப்தில்லாஹ்விற்கு பகரமாக அப்துல்லாஹ் பின் புதைல் பின் வர்கா குஸாயி என்ற பெயரைக் குறிப்பிட்டுள்ளார்.

(ஃபத்ஹுல் பல்தான் பக்கம் 188 – 2000 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தப்ரி வரலாற்று ஆய்வாளர் இவ்வாறு எழுதியுள்ளார்: சில மக்கள் அப்துல்லாஹ் பின் வர்கா அஸதியை இந்தப் போரில் பங்கேற்றதாக கூறுகின்றனர். மேலும் துணை படைத்தளபதியாக இருந்தார்கள். அப்துல்லாஹ் பின் புதைல் பின் வரகா அவர்களுடன் இணைத்து விட்டார்கள். ஆனால் உள்ளபடியே அப்துல்லாஹ் பின் புதைல் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் குறைந்த வயதை உடையவராக இருந்தார்கள். ஸஃபஃபன் போரில் அன்னார் கொலையுண்ட போது அன்னாரின் வயது வெறும் 24 ஆக இருந்தது.

(ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 166–168 – 2007 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது)

ஹம்தானின் கிளர்ச்சி மற்றும் மீண்டும் வெற்றி:

நிஹாவந்திற்குப் பிறகு முஸ்லிம்கள் ஹம்ஸானையும் வெற்றி கொண்டு விட்டார்கள். ஆயினும் ஹம்ஸான் வாசிகள் சமாதானம் செய்து கொண்ட பிறகு ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டார்கள். அஸர் பைஜானிலிருந்தும் இராணுவத்தின் உதவியை பெற்று படையை ஆயதப்படுத்தினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் நயீம் பின் முகர்ரன் அவர்களை 12000 நபர்களைக் கொண்ட படையுடன் அங்கு செல்லும்படி கட்டளையிட்டார்கள். ஒரு கடுமையான போருக்குப் பிறகு முஸ்லிம்கள் நகரத்தை வெற்றி கொண்டு விட்டார்கள்.

(ஸலாபி அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 431 – 2007 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு இந்தப் போரின் நிலையைக் குறித்து ஒரு குறிப்பான கவலை இருந்தது. தூதுவர் வெற்றிக்கான நற்செய்தியை கொண்டு வந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இதன் மூலம் நயீம் பின் முகர்ரன் அவர்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டார்கள். ஹம்தானில் ஒருவரை தனது பிரதிநிதியாக நியமித்து நீங்கள் சுயம் ரே என்ற இடத்திற்கு முன்னேறுங்கள். அங்குள்ள படையை தோல்வியுறச் செய்து ரே என்ற இடத்திலேயே

தங்கியிருங்கள் என்ற கட்டளையை பிறப்பித்தார்கள். ஏனென்றால் இந்த நகரத்திற்கு இந்த அனைத்து பகுதிகளிலும் தலைமையக அந்தஸ்து உள்ளது.

(செய்யது மீர் மஹ்மூது அஹ்மது சாஹிப் நாஸிர் அவர்கள் எழுதிய தாரீகே இஸ்லாம் பஅஹ்தே ஹஸ்ரத் உமர் (ரலி) பக்கம் 169)

எவ்வாறிருப்பினும் மேலும் பல போர்களைப் பற்றிய குறிப்பு உள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் கிடைத்த வெற்றிகளைக் குறித்த நற்குறிப்பு நடந்து வருகின்றது. இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களிலும் இந்த நற்குறிப்பு தொடரும்.

தற்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைப்பேன். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அவர்களின் ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன். இவர்களில் முதலாவது நபரின் நற்குறிப்பு இந்தோநேஷியாவைச் சேர்ந்த முஹம்மது தியானந்த்வனு சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் 15 ஜூலை அன்று 46 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

அன்னாரின் மனைவி இவ்வாறு எழுதியுள்ளார்: மர்ஹூம் அஹ்மதி அல்லாத ஒரு குடும்பத்தில் பிறந்தார். ஆயினும் அன்னாருக்கு குழந்தைப் பருவம் முதலே பள்ளிவாசல் செல்வதற்கு ஆர்வம் இருந்தது. மேலும் ஏனைய பிள்ளைகளிலிருந்து தனித்தவராக இருந்தார்கள். நீண்ட நேரம் வரை பள்ளிவாசலில் இருப்பதும், இஸ்லாமிய போதனையை கற்பதும், அல்லாஹ்வை நினைவு கூர்வதும் அவருக்கு விருப்பமானதாக இருந்தது. இவை அனைத்தும் அன்னாருக்கு உண்மையான அருட்கொடையாக இருந்தன. அல்லாஹ்வின் நெருக்கத்தை பெற்றுக் கொள்வதற்காக இருந்தன என்று அன்னார் கூறி வந்தார்கள்.

கிராமத்தில் ஒரு நண்பர் இருந்தார். அவர் அஹ்மதியாக இருந்தார். இவர் High School லில் படித்தபோது அந்த நண்பரிடமிருந்து அன்னாருக்கு ஜமாஅத்தைக் குறித்து தெரிய வந்தது. அன்னார் Ciledug மற்றும் Cilerevanil ஜமாஅத்தில் பைஅத் செய்தார். அன்னாரின் தந்தையாருக்கு அவர் பைஅத் செய்தது பற்றி தெரிய வந்தபோது அவருக்கு மிகவும் கோபம் வந்தது. மேலும் வீட்டிலிருந்து வெளியேற்றி விட்டார். ஏனென்றால் தனது மகன் வழிகெட்டுப்போய் விட்டார் என்று அவர் கருதியிருந்தார். எவ்வாறிருப்பினும் வீட்டின் கதவு கூட அவருக்காக திறக்கப்படவில்லை. அன்னாருக்கு வெளியிலேயே தூங்க நேரிட்டது. சிறிது காலம் வரை இவ்வாறே நடந்து வந்தது. பின்னர் சிறிது மன்னிப்பும் கிடைத்தது. வீட்டிற்குள் வரத் தொடங்கினார். எவ்வாறிருப்பினும் 1997 ஆம் ஆண்டு உள்ளூர் ஜமாஅத்தின் பொறுப்பாளர்கள் ஜாமிஆவிற்கு செல்லுமாறு அவருக்கு ஆலோசனை வழங்கினார்கள். ஏனென்றால் அவர் முபல்லிக் ஆக ஆகுவதற்கு தகுதி பெற்றிருந்ததாக அவர்கள் கருதினர். மேலும் இளமைப்பருவம் முதலே தப்லீக் செய்வதற்கான ஆர்வம் இருந்தது.

எவ்வாறிருப்பினும் அன்னார் ஜாமிஆவில் சேர்ந்தார்கள். 2002 ஆம் ஆண்டு ஜாமிஆவிலிருந்து பட்டம் பெற்று வெளியேறினார்கள். அன்னார் முதன் முதலில் Jeneponto என்ற ஜமாஅத்தில் பணியமர்த்தப்பட்டார்கள். ஏனென்றால் அன்னாருக்கு தப்லீக்கிற்கான ஆர்வம் இருந்தது. எனவே தாயியான்களுடன் தப்லீக்கிற்காக கிராமம் கிராமமாக சென்றார்கள். அல்லாஹ்வின் அருளால் ஒரு கிராமத்தில் 20 ற்கும் மேற்பட்ட பைஅத்துகள் பெறுவதற்கு நற்பேறு கிடைத்தது. மிஷன் ஹவுஸ் கட்டுமானப் பணி தொடங்கியபோது அவர்கள் சுயமே பணி செய்து வந்தார்கள். அந்த நேரத்தில் ஜமாஅத்தில் அந்த இடத்தில் எந்த மிஷன் ஹவுஸும் இருந்திருக்கவில்லை.

அன்னாரின் மனைவி இவ்வாறு கூறுகின்றார்கள்: எனக்கு நினைவு உள்ளது. நாங்கள் மிகவும் எளிமையான வாடகை வீட்டில் வசித்து வந்தோம். அது எவ்வளவு எளிய வீடாக இருந்ததென்றால் வீட்டில் பெரிதாக எந்த பொருளும் இருந்திருக்கவில்லை. வீட்டிலிருந்த மொத்த பொருள் என்னவாக இருந்ததென்றால் வெறும் ஒரு கம்பளி மற்றும் ஒரு தலையணை இருந்தது. ஒரு கட்டில் இருந்தது. அதில் தூங்கி வந்தனர். உணவு சமைப்பதற்காக இருந்த பாத்திரத்தை பயன்படுத்தி வந்தார்கள். எல்லா பணியும் அதிலேயே நடக்கும். அதிலேயே உணவு சமைத்து வந்தார்கள். அதிலேயே தண்ணீரும் வைத்து வந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஒரு நாள் தப்லீக் தலைவர் சுயூத்தி அஸீஸ் சாஹிப் மற்றும் மாநில முபல்லிக் ஸைஃபுல் உயூன் சாஹிப் எங்களது வீட்டிற்கு வந்தார்கள். வீட்டின் நிலையைப் பார்த்து இருவருக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. எவ்வாறிருப்பினும் அதன் பிறகு ஜேனேபோன்டோ ஜமாஅத்தில் மிஷன் ஹவுஸ் கட்டுவதற்கு தலைமையகத்தில் விண்ணப்பிக்கப்பட்டது. மேலும் அங்கு மிஷன் ஹவுஸும் கட்டப்பட்டது. அதற்குப் பிறகு பள்ளிவாசலும் உருவாகி விட்டது. முதலில் முஸ்லிம்களின் ஒன்றுபட்ட ஒரு பள்ளிவாசலில் தொழுகையை நிறைவேற்றி வந்தார்கள். பின்னர் எதிர்ப்பின் காரணமாக இங்கு தொழுவது நின்று விட்டது. பின்னர் ஒரு வீட்டில் தொழுது வந்தனர். பள்ளிவாசல் கட்டுவதில் ஏராளமான தடைகள் இருந்தன. பள்ளிவாசல் கட்ட விரும்பினர். ஆனால் மேஸ்திரிகள் பணி செய்ய மறுத்து விட்டனர். கிராமத்தின் தலைவராக இருந்தவரும் பள்ளிவாசல் கட்ட விட மாட்டோம் என்று எச்சரிக்கை விடுத்திருந்தார்.

எவ்வாறிருப்பினும் இந்த அனைத்து தடைகளுக்கு மத்தியிலும் அவர்கள் தைரியம் இழந்து விடவில்லை. மேலும் பெரும் உறுதியான எண்ணத்துடன் பள்ளிவாசல் கட்டத் தொடங்கினர். வேலையாட்கள் வரவில்லை என்றால் காதிம்கள் மற்றும் அத்ஃபால்களைக் கொண்டு வகாரே அமல் செய்ய வைத்தார்கள். இன்னும் கூறப்போனால் அஹ்மதி அல்லாதவர்களின் பிள்ளைகள் வகாரே அமல் பணியில் ஈடுபட்டு வந்தார்கள். எவர்களுடன் நல்ல தொடர்பு இருந்தோ அவர்கள் வந்தனர். இவ்வாறு அந்த பள்ளிவாசல் உருவாகி விட்டது.

அன்னாரின் மனைவி கூறுகின்றார்கள்: ஜகார்த்தாவில் பணி நியமனம் நிகழ்ந்தபோது அங்கும் நிறைய எதிர்ப்பு ஏற்பட்டது. ஆனால் அங்கு வெள்ளம் வந்தபோது அஹ்மதி அல்லாத எதிர்ப்பாளர்கள் அடைக்கலம் வேண்டி நமது பள்ளிவாசலுக்கு வரத் தொடங்கி விட்டனர்.

அன்னார் கூறுகின்றார்கள்: இரண்டு ஆண்டு தொடர்ந்து வெள்ளம் வந்தது. இந்த மக்கள் நமது பள்ளிவாசலிலேயே அடைக்கலம் பெற்று வந்தனர். ஒரு பக்கம் எதிர்த்து வந்தனர். பின்னர் அடைக்கலம் வேண்டி நம்மிடம் வந்தனர். பின்னர் இவ்விவகாரம் சற்று தணிந்து விட்டது.

அவர்களின் பணிகளில் சிறப்பான ஒரு பணி என்னவென்றால், அன்னார் இந்தோநேஷியாவில் ரேடியோ மற்றும் இன்டர்நெட் மூலமாக ஜமாஅத்தின் தூதுச் செய்தி மற்றும் காலத்தின் கலீஃபாவின் குத்பாக்களின் நேரடி மொழியாக்கத்தை முன் வைக்கும் ஏற்பாட்டைச் செய்து வந்தார்கள். அப்போது இங்கு Youtube மூலமாக குத்பா நேரடியாக மொழியாக்கம் செய்வதற்கான ஏற்பாடு துவங்கியிருக்கவில்லை. எவ்வாறிருப்பினும் அன்னார் முழு வாழ்க்கையிலும் மிகவும் உழைத்துள்ளார்கள். ஜமாஅத்தின் ருரு முன்னுதாரணமான முபல்லிக்காக இருந்தார்கள்.

அன்னார் தமக்குப் பிறகு மனைவி மட்டுமல்லால் ஐந்து பிள்ளைகளை விட்டுச் சென்றுள்ளார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

இரண்டாவது ஜனாஸா அமெரிக்காவின் சிகாகோவைச் சேர்ந்த சாஹிப்ஸாதா ஃபர்ஹான் லத்தீஃப் சாஹிப் அவர்களுடையதாகும். சிறிது காலத்திற்கு முன்பு அன்னாரின் மரணம் நிகழ்ந்துள்ளது. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

மர்ஹூம் ஹஸ்ரத் சாஹிப்ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் ஷஹீத் அவர்களின் கொள்ளுப் பேரனாக இருந்தார்கள். சிகாகோ ஜமாஅத்தின் சுறுசுறுப்பான ஊழியராக மர்ஹூம் இருந்தார்கள். எப்போதும் உதவிக்கும், தொண்டு செய்வதற்கும் தயாராக இருந்து வந்தார்கள். முகத்தில் புன் சிரிப்பும், சலாம் கூறுவதில் முந்திக் கொள்வதும் அன்னாரின் தனித்துவமான பண்பாக இருந்தது. பள்ளிவாசலில் சிறிய, பெரிய எந்த பணியாக இருந்தாலும் அதற்காக லெப்பைக் என்று கூறி வந்து விடுவார்கள். எப்போதும் தொண்டாற்றுவதில் முதல் வரிசையில் இருந்து வந்தார்கள். சிகாகோ ஜமாஅத்தில் ஆடிட்டர் பொறுப்பை மிகவும் அழகிய முறையில் நிறைவேற்றி வந்தார்கள். மர்ஹூம் மூஸியாக இருந்தார்கள். தமக்குப் பிறகு மூன்று சிறிய பிள்ளைகளையும், வயதான தந்தையையும் விட்டுச் சென்றுள்ளார்கள். மரணத்தின்போது அன்னாரின் வயது 45 ஆக இருந்தது. அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. பிள்ளைகளையும் ஜமாஅத்துடன் எப்போதும் தொடர்புடையவர்களாக வைப்பானாக.

அடுத்த நற்குறிப்பு லாஹூரைச் சேர்ந்த மலிக் முபஷ்ஷிர் அஹ்மது சாஹிப் அவர்களுடையதாகும். நீண்ட காலம் ஆகிவிட்டது. நவம்பர் 21 ஆம் தேதி அன்னாரின் மரணம் நிகழ்ந்தது. ஆனால்

ஜனாஸா தொழ வைக்கப்படவில்லை. அன்னாரின் ஜனாஸா தொழுகையை தொழ வைக்க வேண்டும் என்று அன்னாரின் மகன் எழுதியிருந்தார். அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியும், திருக்குர்ஆனின் விரிவுரையாளருமான ஹஸ்ரத் மவ்லானா குலாம் ஃபரீத் சாஹிப் (ரலி) அவர்களின் மகனாக இருந்தார்கள். தாவூத் கைல் மியான்வாலி மாவட்டத்தின் ஜமாஅத்தின் அமீராக மட்டுல்லாமல் ஹைதராபாத்தில் பல்வேறு ஜமாஅத் பொறுப்புகளில் மர்ஹூம் தொண்டாற்றும் நற்பேறு பெற்றுள்ளார்கள். திருக்குர்ஆன் அகராதியின் முழுமை செய்கின்ற பணிகளிலும் பணி செய்வதற்கு அன்னாருக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப அன்னார் தனது தந்தையான மலிக் குபாம் ஃபரீத் சாஹிப் அவர்களின் மரணத்திற்குப் பிறகு தமது சிறிய சகோதரரின் துணையுடன் ஒழுங்குபடுத்தியுள்ளார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. நான் ஏற்கனவே கூறியதுபோன்று ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்கள் அனைவரின் ஜனாஸா தொழுகைகளை தொழ வைப்பேன்.

(தமிழில்: மவ்லவி அ.அப்துர் ரஹ்மான் தாஹிர்)

......☆......☆......☆......

*(கடைசி பக்கத்தின் தொடர்ச்சி...)*

பின்னர் திருக்குர்ஆனிற்கு தொண்டாற்றுவதற்காக முஸ்லிம்கள் வரலாற்றையும் கண்டுபிடித்தார்கள். ஏனென்றால் திருக்குர்ஆனில் பல்வேறு சமுதாயங்களின் நிலைமைகள் வந்துள்ளன. அதனை ஒன்றுகூட்ட முஸ்லிம்கள் தொடங்கினார்கள். அப்போது ஏனைய உலகின் நிலைமைகளையும் அத்துடன் ஒன்றுகூட்டி விட்டார்கள். அடுத்து இல்மே ஹதீஸ் தொடங்கியது. அதுவும் திருக்குர்ஆனுக்கு தொண்டாற்றுவதற்காக இல்மே ஹதீஸ் உருவானது. ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனிற்கு என்ன பொருள் வழங்கினார்கள்? என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அது உருவானது.

பின்னர் தத்துவவாதிகளின் திருக்குர்ஆன் மீதான ஆட்சேபனைகளிலிருந்து தற்காப்பிற்காக முஸ்லிம்கள் தத்துவம் போன்ற கல்வியை கண்டுபிடித்தார்கள். தர்க்க அறிவிற்காக புதிய ஆனால் ஆய்வுக்குரிய வழிகளை உருவாக்கினார்கள். அடுத்து திருக்குர்ஆனின் கவனமூட்டலின் காரணமாகவே மருத்துவத்தின் அடிப்படையும் நிலைநாட்டப்பட்டது. நஹூவில் திருக்குர்ஆன் வசனங்களின் உதாரணங்கள் கொடுக்கப்பட்டன. இலக்கியத்தில் சிறந்த தொகுப்பாக திருக்குர்ஆன் வசனங்கள் நிர்ணயிக்கப்பட்டன.

சுருக்கமாக, ஒவ்வொரு கல்வியிலும் திருக்குர்ஆனின் வசனங்கள் ஆதாரமாக பதியப்பட்டன. இந்த அனைத்து புத்தகங்களின் வசனங்களையும் ஒன்றுகூட்டினால் அதன் மூலமும் முழு திருக்குர்ஆனையும் தொகுத்து விடலாம் என்று நான் கருதுகிறேன். திருக்குர்ஆனின் தொண்டிற்காக ஏனைய மொழிகளின் பக்கம் கவனம் செலுத்தியதன் ஒரு தற்காலிக நன்மை இதுவும் ஆகும். முந்தைய வேதங்களிலிருந்து உலக அறிஞர்களின் பிரிவு முற்றிலும் அறியாததாக இருந்தது. ஆனால் முஸ்லிம்களில் அந்த அறிவின் நிபுணர்கள் எப்போதும் திருக்குர்ஆனின் தொண்டர்களாக இருந்து வருகின்றனர். ஏனென்றால் திருக்குர்ஆன் உண்மையான ஞானங்களுக்கு எதிரி அல்ல. மாறாக, ஆதரவு அளிக்கக்கூடியதாகும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4 பக்கம் 18 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## 126 வது காதியான் ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய...) அவர்கள் 126 வது காதியான் ஆண்டு மாநாட்டை நடத்த டிசம்பர் 24, 25, 26 (வெள்ளி, சனி, ஞாயிறு) 2021 ஆகிய தேதிகளுக்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் துஆக்களுடன் இப்போதிருந்தே ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கு நிய்யத் வைத்து தயாரிப்புகளை தொடங்கி விடுங்கள். இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறும் நற்பேறை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக. ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாகவும், அருளுக்குரியதாகவும் நடைபெறவும், நல்லுள்ளங்களின் நேர்வழிக்கு காரணியாக அமையவும் தொடர்ந்து துஆக்கள் செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா, காதியான்)

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களுடன் அஹ்மதிய்யா ஜமாஅத் கானாவின் தேசிய செயற்குழுவின் காணொலி சந்திப்பு

கானா குறைந்தபட்சம் ஆஃப்ரிக்க நாடுகளுடனான போட்டியில் முதல் இடத்தை பெற வேண்டும். இது எனது விருப்பமும், ஆசையும் ஆகும். எனது இந்த தூதுச் செய்தியை கானாவிலுள்ள அனைத்து அஹ்மதிகளுக்கும் எட்ட வைத்து விடுங்கள்.

அல்லாஹ்வின் அருளால் 28 நவம்பர் 2020 அன்று மேற்கு ஆஃப்ரிக்க நாடான கானாவின் தேசிய செயற்குழுவிற்கு தனது அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களுடன் புஸ்தானே அஹ்மது என்ற இடத்தில் MTA வின் வஹ்ஹாப் ஆதம் ஸ்டியோவில் வைத்து காணொளி மூலம் சந்திக்கும் நற்பேறு கிடைத்தது. இதற்கு முன்பு ஹுஸூர் அவர்களுடன் 2004 ஆம் ஆண்டில் தமது கிலாஃபத் சுற்றுப் பயணத்தில் முதல் முறையாக கானா வருகை தந்தபோது தேசிய செயற்குழுவுடன் அக்ரா நகரத்தில் அஹ்மதிய்யா மிஷனின் தலைமையகத்தில் வைத்து சந்திப்பு நிகழ்ந்தது. இந்த அடிப்படையில் நவம்பர் 28 ஆம் தேதி 2020 ஒரு மகிழ்ச்சிக்குரிய நாளாக இருந்தது. அதாவது சுமார் 16 ஆண்டுகளுக்கு பிறகு கானா தேசிய செயற்குழுவிற்கு மீண்டும் இந்த நற்பேறு கிடைத்துள்ளது. பிற்பகல் 12:18 மணியளவில் சந்திப்பு தொடங்கியது. சுமார் 80 நிமிடம் வரை இந்த சந்திப்பு தொடர்ந்தது. சந்திப்பின் துவக்கத்தில் ஹுஸூர் அவர்கள் துஆ செய்தார்கள். எல்லையற்ற அன்புடனும், பரிவுடனும் சந்திப்பின்போது ஹுஸூர் அவர்களின் முகம் புன்னகையால் நிறைந்திருந்தது. எல்லா வகையிலும் ஹுஸூர் அவர்களின் அன்பின் ஜுவாலை வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

துவக்கத்தில் துஆ செய்த பிறகு அனைத்து செயற்குழு உறுப்பினர்களும் ஒருவருக்கு பின் ஒருவராக எழுந்து நின்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டனர். மேலும் தமது துறை தொடர்பாக ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்களிடமிருந்து பொன்னான வழிகாட்டல்களை பெற்றுக் கொண்டனர். கானாவின் நல்வாய்ப்பு என்னவென்றால், ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்கள் ஏராளமான முகங்களை நன்கு அறிந்திருந்தார்கள். அறிமுகப்படுத்தும் சந்தர்ப்பத்தின்போது சில நற்பேறு பெற்றவர்களைப் பார்த்து பரிவு நிறைந்த, அன்பு நிறைந்த வகையில் ஹுஸூர் (அய்ய) அவர்கள், அவர்களிடம் அன்பை வெளிப்படுத்தி அவர்களின் உள்ளங்களை ஊக்கப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

ஹுஸூர் (அய்ய) அவர்களுக்கு ஏராளமான இடங்கள் மற்றும் ஏராளமான மக்களுடன் தனிப்பட்ட தொடர்பும் இருந்தது என்ற விஷயம் அனைத்து உறுப்பினர்களின் உள்ளங்களையும் கவரக்கூடியதாக இருந்தது. ஹஸ்ரத் மவ்லவி முஹம்மது பின் சாலிஹ் சாஹிப் அமீர் மற்றும் மிஷனரி இன்சார்ஜ் சாஹிப், நாயிப் அமீர்மார்கள் ஆகியோரின் அறிமுகத்தை பெற்ற பிறகு ஹுஸூர் அவர்கள் கானா அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பொதுச் செயலாளர் அவர்களிடம் அவரது பணி தொடர்பாக கேட்டார்கள். அவர் எவ்வாறு தமது பணியை மேம்படுத்திக் கொள்ள முடியும்? என்பது தொடர்பாகவும் வழிகாட்டல்கள் வழங்கினார்கள். நீங்கள் குறைந்தபட்சம் இரண்டு மணி நேரம் மிஷன் ஹவுஸிற்கு வருகை தந்து பணி செய்து வாருங்கள் என்று ஹுஸூர் (அய்ய) கூறினார்கள்.

அதன் பிறகு ஹுஸூர் (அய்ய) அவர்கள் ஜாமிஆ அஹ்மதிய்யா கானாவின் முதல்வர் அவர்களிடம் மாணவர்களின் எண்ணிக்கை குறித்து கேட்டார்கள். அப்போது ஜாமிஆ அஹ்மதிய்யா இண்டர்நேஷனல் கானாவில் தற்போது 24 நாடுகளைச் சேர்ந்த 231 மாணவர்கள் கல்வி பயில்வதாக முதல்வர் அவர்கள் கூறினார்கள். அப்போது மாஷா அல்லாஹ் உண்மையான பொருளில் இது இண்டர்நேஷனல் ஜாமிஆ ஆகும் என்று ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள். (தொடரும்...)

(அறிக்கை: அலீம் மஹ்மூது, முரப்பி கானா
நன்றி: அல்ஃபஸல் இண்டர்நேஷனல் 11 டிசம்பர் 2020)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS

DOORS & STEELS EXPERT



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 23 Sep 2021 Issue No. 38

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து... முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

### ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழியை ஒருபோதும் விட்டு விடாதீர்கள்

நான் உங்களுக்கு இதனை கூற விரும்புகின்றேன். அதாவது ஏராளமான மக்கள் உள்ளனர். அவர்கள் சுயமே உருவாக்கிக் கொண்ட வழிமுறைகள் மூலமாகவும், திட்டங்கள் மூலமாகவும் அந்த சிறப்புகளை பெற விரும்புகின்றனர். ஆனால் நான் உங்களுக்கு கூறுகின்றேன். எந்த வழிமுறையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேற்கொள்ளவில்லையோ அது முற்றிலும் வீணானதாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட அருட்கொடைகளை பெற்ற வழியில் உண்மையான அனுபவத்தை பெற்றவர் வேறு யாராக இருக்க முடியும்.? அன்னார் (ஸல்) அவர்கள் மீது நபித்துவத்தின் அனைத்து சிறப்புகளும் நிறைவடைந்துள்ளன. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேற்கொண்ட வழி மிகவும் சரியானதும், நெருக்கமானதும் ஆகும். அதனை கைவிட்டு விட்டு புதியதை தேடுவதும், அது எவ்வளவு தான் மகிழ்ச்சியளிக்கக் கூடியதாக தெரிந்தாலும் சரி! எனது கருத்தின்படி அது அழிவிற்குரியதாகும்.

இறைவன் என் மீது இதையே வெளிப்படுத்தியுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை உண்மையாக பின்பற்றுவதன் மூலம் இறைவன் கிடைக்கின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றுவதை விட்டுவிட்டு ஒருவர் வாழ்நாள் முழுவதும் எவ்வளவு தான் முட்டிக் கொண்டிருந்தாலும் அவரால் எந்த நோக்கத்தையும் அடைய முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழியை விட்டு விடாதீர்கள். நான் காண்கின்றேன். வகை வகையான வழிமுறைகளை மக்கள் கண்டுபிடித்து வைத்துள்ளனர். தலைகீழாக தொங்குகின்றனர். யோகிகளைப் போன்று துறவறம் போன்ற வழிமுறை மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் இவை அனைத்தும் பயனற்றவையாகும். தலைகீழாக தொங்கிக் கொண்டிருப்பதும், எதிர்மறையான விஷயங்களை முன்வைப்பதும், மாற்றமான திக்ர்களை செய்வதும் நபிமார்களின் வழிமுறையல்ல. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இதனால் தான் அல்லாஹ் அழகிய முன்மாதிரி என்று கூறியுள்ளான். لَكُمْ فِيْ رَسُوْلِ اللّٰهِ اُسْوَةٌ حَسَنَةٌ (உங்களுக்கு அல்லாஹ்வின் திருத்தூதரிடத்து மிக மேலான முன்மாதிரி உள்ளது. (33:22))

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிச்சுவட்டில் செல்லுங்கள். ஓர் அணு அளவும் இங்கும் அங்கும் செல்வற்கு முயற்சி செய்தாதீர்கள்.

### அஹ்மதிய்யா ஜமாஅத் நிலைநாட்டப்பட்டதன் நோக்கம்

முன்ஹிம் அலைஹிம் (அருட்கொடைகளைப் பெற்றவர்களின்) சிறப்புகளை صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ என்பதில் அல்லாஹ் சுட்டிக் காட்டியுள்ளதை பெறுவதே ஒவ்வொரு மனிதனின் அசல் நோக்கமாகும். நமது ஜமாஅத் இதன் பக்கம் சிறப்புடன் கவனம் செலுத்த வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தயார் செய்ததுபோன்ற ஜமாஅத்தை தயார் செய்ய வேண்டுமென அல்லாஹ் இந்த ஜமாஅத்தை நிலைநாட்டியதன் மூலம் விரும்பியுள்ளான். ஏனென்றால் இந்த இறுதி காலத்தில் திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை மற்றும் மகத்துவத்திற்கு சாட்சியாக இந்த ஜமாஅத்தை இறைவன் ஆக்க விரும்புகின்றான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 323 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

*(திருக்குர்ஆன் விளக்கவுரை... முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஏற்படுத்தியுள்ளான் என்றால் பொருள் தெரியுமோ, தெரியாதோ அவர்கள் அதனை ஓதிக் கொண்டே செல்கின்றார்கள். திருக்குர்ஆனை பொருளுடன் ஓதுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். இதன் பக்கம் கவனமற்று இருப்பது மாபெரும் அழிவிற்கு காரணியாகும். ஆயினும் பொருள் அறியாதபோதிலும் திருக்குர்ஆனை முஸ்லிம்கள் மனனம் செய்து கொண்டே செல்வது நிச்சயமாக இந்த வசனத்தில் இடம் பெற்றுள்ள வாக்குறுதி முழுமை பெறுவதற்கான சான்றாகும்.

இன்று பைபிளின் அனைத்து பிரதிகளும் எரிக்கப்பட்டு விட்டால் பைபிளின் 20–ல் ஒரு பங்கை கூட மீண்டும் ஒன்றுகூட்ட முடியாது. ஆனால் திருக்குர்ஆனுக்கு கிடைத்துள்ள பெருமிதம் இதுவாகும். அதாவது ஒருவேளை (கற்பனையாக வைத்துக் கொள்ளுங்கள்) முழு திருக்குர்ஆனின் பிரதிகளும் முழு உலகிலிருந்தும் மறைந்து விட்டாலும் அப்போதும் இரண்டு, மூன்று நாட்களுக்குள் முழு திருக்குர்ஆனும் கிடைத்து விடும். பெரும் நகரங்கள் ஒரு பக்கம் இருக்கட்டும். நமது காதியான் போன்ற சிறிய ஊரில் சொல்லுக்கு சொல் அதனை அப்படியே எழுதி விட முடியும்.

உலகில் எந்தவொரு மார்க்க நூலும் இவ்வாறு இல்லை. அதாவது அதனை அழித்து விட்ட பிறகும் மீண்டும் பாதுகாப்பாக திருக்குர்ஆனை தவிர வேறு எந்த நூலும் இருக்காது. அல்லாஹ் திருக்குர்ஆனின் பாதுகாப்பிற்காக மற்றொரு வழிமுறையையும் வைத்துள்ளான். அதாவது திருக்குர்ஆன் இறங்கிய உடனேயே முழு உலகிலும் பரவுவதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டது. தற்போது அதில் எந்த மாற்றமும் செய்வதற்கான வாய்ப்பே இல்லாமல் ஆகிவிட்டது.

ஒரு முறை ரஷ்ய அரசாங்கம் ஜிஹாத் வசனங்களை அகற்றி விட்டு திருக்குர்ஆன் அச்சிட வேண்டுமென எண்ணம் கொண்டது என்று கூறப்படுகின்றது. ஆனால் திருக்குர்ஆன் முழு உலகிலும் பரவி இருக்கின்றது. இந்த வசனங்கள் எல்லா இடங்களிலும் உள்ளன. பின்னர் நீங்கள் எப்படி இதனை நீக்குவீர்கள்? என்று அவர்களிடம் கூறப்பட்டது. அதனால் அவர்கள் தமது எண்ணங்களிலிருந்து விலகிக் கொண்டனர்.

திருக்குர்ஆனின் பாதுகாப்பிற்கான ஒரு வழிமுறை இதுவாக இருந்தது. அதாவது இஸ்லாமிய கல்வியின் அடிப்படை திருக்குர்ஆன் மீது வைக்கப்பட்டுள்ளது. இந்த வழிமுறை மூலமாக அதன் ஒவ்வொரு எழுத்தும் சொல்லும் பாதுகாப்பாக ஆகி விட்டது. உதாரணமாக, நஹ்வு (என்ற இலக்கண) கல்வி உருவானது. அது திருக்குர்ஆனிற்கு தொண்டாற்றுவதற்காக உருவானது. எனவே நஹ்வு என்ற இலக்கண கல்வி உருவானதன் காரணமாக இவ்வாறு கூறப்படுகிறது.

அபூ அல்அஸ்வது, ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் வந்தார். ஒரு புதிய முஸ்லிம் اَنَّ اللّٰهَ بَرِىْٓءٌ مِّنَ الْمُشْرِكِيْنَ ۙ وَرَسُوْلُهٗ என்பதற்கு பகரமாக وَرَسُوْلِهٖ என்று ஓதிக் கொண்டிருந்தார். இதன் மூலம் புதிய முஸ்லிம்களுக்கு திருக்குர்ஆனின் பொருளை புரிவதில் கஷ்டம் ஏற்படும் என்ற அச்சம் உள்ளது என்று கூறினார்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அப்போது குதிரையின் மீது ஏறி சவாரி செய்து சென்று கொண்டிருந்தார்கள். அந்த நிலையிலேயே அன்னார் அவருக்கு சில நஹ்வு சட்டங்களை கூறிக் கொண்டே சென்றார்கள். இதுபோன்ற சட்டங்களை நடைமுறைப்படுத்துங்கள். இதன் மூலம் புதிதாக இஸ்லாத்தை தழுவுபவர்களுக்கு சரியான திலாவத் செய்வதற்கு நற்பேறு கிடைத்து விடும். சில சட்டங்களை உருவாக்கி اُنْحُ نَحْوَهٗ என்று கூறினார்கள். அதாவது இதே வடிவில் மேலும் சட்டங்களை தயார் செய்யுங்கள். இந்த வாக்கியத்தின் காரணமாக அரபி இலக்கணத்தின் பெயர் நஹ்வு என்று ஆனது.

*(தொடர்ச்சி 11 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad